வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 10.11.2021 புதன்கிழமை | இதழ் : 340 | பக்கங்கள் : 16








## யாழ்., மன்னார், கிளிநொச்சியில்

# தொடரும் கடும் மழை; 37,915 பேர் பாதிப்பு

• பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

யாழ்ப்பாணம், நவம்பர் 10

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் தொடரும் கடும் மழையால் குடும்பங்களை சேர்ந்த 11 ஆயிரத்து 112 குடும்பங்களை சேர்ந்த 37,915 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 15

## கனமழை பாதிப்பால் உயிரிழந்தோர் 15 பேர்!

கொழும்பு, நவ. 11

நாட்டில் தொடர் மழை காரணமாக ஏற்பட்டுள்ள அனர்த்தங்களில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள் 15

## கடலுக்கு செல்லவேண்டாம்!



யாழ்ப்பாணம், நவ. 11

மறு அறிவித்தல் வரை தென்மேற்கு வங்காள விரிகுடா மற்றும் இலங்கையைச் சுற்றியுள்ள ஆழம் மற்றும் ஆழம் குறைந்த கடல் பகுதிகளிலும் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. 15

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு டான் ரீவி உதவி



மன்னார், நவ. 11

மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு 6 இடைத்தங்கல் முகாம்களில் வசித்து வரும் குடும்பங்களுக்கு டான் தொலைக்காட்சி நிறுவனத்தினரால் 15

## சாதாரண தரம் அழகியல் பரீட்சை டிசெம்பரில்

கொழும்பு, நவ. 10

2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் அழகியல் பாடங்களுக்கான செய்முறை பரீட்சைகள் எதிர் 15

## யாழ். – கொழும்பு ரயிலில் தீ விபத்து

வவுனியா, நவ. 10

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த ரயிலில் தீ விபத்து ஏற்பட்டது. ரயில் ஊழியர்களால் அந்தத் தீ உடனடியாக கட்டுக்குள் கொண்டு 15

## ஏ-9 வீதி பரந்தனில் விபத்து இரு இளைஞர்கள் மரணம்!

பிறந்த தினத்துக்கு முதல்நாள் சோகம்

கிளிநொச்சி, நவ. 10

வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பார ஊர்தியுடன் அதிவேகமாக வந்த மோட்டார் சைக் 15

## மீண்டும் அதிகரிக்கும் கொரோனா மரணங்கள்

கொழும்பு, நவ. 11

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி நேற்று முன்தினம் மேலும் 17 பேர் உயிரிழந்துள்ளனர் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

10 ஆண்களும் 07 பெண்களும் 15

## தாக்குதலுக்கு முன் சஹ்ரானை சந்தித்த புலனாய்வு அதிகாரி

பாராளுமன்றத்தில் ஹரீன் பெர்னான்டோ



கொழும்பு. நவ. 10

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் புலனாய்வு பிரிவு அதிகாரியொருவர் சஹ்ரானை வீட்டில் சந்தித்துள்ளதாக 15

## கனடாவுக்கு செல்ல முயன்ற 21 பேர் சிலாபத்தில் கைது!

யாழ், கிளிநொச்சியை சேர்ந்தவர்கள்

கொழும்பு, நவ. 10

சட்டவிரோதமாக கனடாவுக்கு செல்ல முயற்சித்த ஒரு பெண், 4 சிறுவர்கள் உள்ளிட்ட 21பேர் கடற்படையினரால் அதிரடியாகக் கைது செய்யப்பட்டனர்.

சிலாபம் முகத்துவாரத்துக்கு அரு 15




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# நவமங்கை நிவச இயக்குநர் கௌரவிப்பும் ‘சாதனைப் பெண்மணி’ நூல் வெளியீடும்




*யாழ்ப்பாணம், நவ. 10*

*யாழ்ப்பாணம் நவமங்கை நிவச இயக்குநர் சுவர்ணா நவ ரட்ணத்திற்கான கௌரவிப் பும், சாதனைப் பெண்மணி நூல் வெளியீடும் யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக் கல் லூரியில் இடம்பெற்றது.*

*யாழ்ப்பாணம் தேசிய கல் லூரி விரிவுரையாளார் கலாநிதி ஜெயலாட்சுமி உதயகுமார் தலை மையில் நடைபெற்றற குறித்த நிகழ்வில் வரவேற்புரை பேராசிரி யர் தனபாலன் நிகழ்த்தினார்.*

*ஆசியுரைகளை, கம்பவாரி ஜெயராஜ், வடக்கு மாகாண முன் னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராஜா வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நளாயினி இன்ப ராஜ் ஆகியோர் வழங்கினர்.*

*இந்த நிகழ்வில் குறித்த சாத னைப் பெண்மணி தொடர்பான ஆவணங்கள் அடங்கிய ‘சாத னைப் பெண்மணி’ எனும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.*

*சாதனைப் பெண்மணி நூலினை அகில இலங்கை கம் பன் கழக கம்பவாரி ஜெயராஜ் வெளியிட்டு வைக்க சுவர்ணா நவரட்ணம் பெற்றுக்கொண் டார்.*

*ஆசியுரை வழங்கிய கம்ப வாரிதி ஜெயராஜ் சுவர்ணா நவரட்ணத்துக்கு ‘வனிதையரின் திலகம்’ எனும் பட்டத்தினை வழங்கி கௌரவித்திருந்தார்.*

# மரண அறிவித்தல்

**பிறப்பு**
**07 - 07 - 1947**



**இறப்பு**
**07 - 11 - 2021**

## திருமதி பாலமணி பொன்னம்பலம்

யாழ்ப்பாணம் ஊரங்குணையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Neuilly sur Marne ஐ வதிவிடமாகவும் கொண்ட பாலமணி பொன்னம்பலம் அவர்கள் 07-11-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கற்பகம் தம் பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத் தம்பி பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், பாலதாசன் (முருகன்), கண்ணதாசன் (கண்ணன்), கவிதாசன் (கவி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான பரமசாமி (திருச்சி- இந்தியா), மகேஸ்வரி(பேபி) மற்றும் நல்லதம்பி (வெள்ளி, இலங்கை), இளையதம்பி (குறுணி- கனடா), அன்னபூரணம் (பட்டு- இலங்கை), நகுலேஸ்வரி (ராசாத்தி- ஜேர்மனி), செல்வரத்தினம் (அப்பர்- கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,தேவிகா பாலதாசன், உஷாயினி கண்ணதாசன், நிசாந்தி கவிதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இராசமலர், இந்திராணி, வள்ளியம்மை, மகாலஷ்மி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,காலஞ்சென்ற ரட்ணம்(தேவர்), அமிர்தலிங்கம் (அமுதர்), செல்வராசா(பெரியாம்பி) ஆகியோரின் அன்பு மச்சாளும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (இராசு), அன்னலட்சுமி, நடராசா (பத்தர்) ஆகியோரின் அண்ணியாரும், நிது ஷிகா, நிஷானி, நிதர்ஷா, நிவாஸ், நிவிஷா, கபில்ராஜ், சஜின்ராஜ், அஜய், ஆகாஷ், கபிஷா, கஜீபன், கஜந்தன், கிஷோர், கிர்த்திக் ஆகி யோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

**பார்வைக்கு**
Tuesday, 09 Nov 2021 2:00 PM - 3:00 PM
Friday, 12 Nov 2021 2:00 PM - 3:00 PM
Sunday, 14 Nov 2021 3:00 PM - 4:00 PM
Crématorium de Villetaneuse 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

**கிரியை**
Tuesday, 16 Nov 2021 1:15 AM - 2:15 AM
Crématorium de Villetaneuse 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

**பார்வைக்கு**
Tuesday, 16 Nov 2021 2:30 PM - 3:30 PM
Crématorium de Villetaneuse 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

**தகனம்**
Tuesday, 16 Nov 2021 3:30 PM
Crématorium de Villetaneuse 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**முருகன் - மகன்**
Mobile : +33766297571

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## திருட்டு

*வடமராட்சி, நவ. 10*

*அல்வாய் -திக்கம் மானாண்டி சந்தையில் உள்ள கடை உடைக் கப்பட்டு 2 இலட்சம்ரூபாய் பெறு மதியான உணவுப் பொருட் களும் 5 ஆயிரம் ரூபாய் ரொக் கப் பணமும் திருடப்பட்டுள்ளது.*

*நேற்று முன்தினம் திங்கட் கிழமை இரவு இந்தத் திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*இது தொடர்பில் பருத்தித் துறை பொலிஸ் நிலையத்தில் உரிமையாளர் முறைப்பாடு செய் துள்ளார். (ஐ - 02)*



## பேராசிரியர் பாலசுப்பிரமணியம் காலமானார்

*யாழ்ப்பாணம், நவ. 10,*

*யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட முன்னாள் பீடாதி பதி கந்தையா பாலசுப்பிரமணி யம் கொழும்பில் நேற்று கால மானார்.*

*அவரது இறுதிச் சடங்குகள் கொழும்பு, பொரளை, ஜெய ரத்ன மலர்ச்சாலையில் இடம் பெற்று, கனத்தை பொது மயா னத்தில் இன்று மாலை தகனக் கிரியைகள் நடைபெறும் எனவும் குடும்பத்தினர் தெரி வித்தனர்.*

## வடமாகாண மரநடுகை மாதம் 10 கார்த்திகை 2021

**“உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப் போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்”**

**- கரோலஸ் இலினேயஸ் (தாவர வகைப்பாட்டியலாளர்)**

கல்வி TV CHANNEL-1

**10.11.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மாதிரி வினாத்தாள் மறுஒளிபரப்பு-LIVE கணிதம் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி TV CHANNEL - 2

**10.11.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
10.11.2021 புதன்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# சம்பந்தனின் நிபுணர் குழு?

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அழைப்பின் பெயரில் கூட்டமைப்பின் நிபுணர் குழுவொன்று விரைவில் அமெரிக்கா செல்லவுள்ளதாக செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இந்தக் குழுவுக்கான உறுப்பினர்களை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனே தெரிவு செய்திருக்கின்றார். பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், சட்டத்தரணி கனக ஈஸ்வரன் மற்றும் கலாநிதி நிர்மலா சந்திரஹாசன் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றிருக்கின்றனர். ஆனால், இந்த விடயம் தொடர்பில் - கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் கலந்துரையாடப்படவில்லை. அவர்களும் பொது மக்களைபோல் பத்திரிகைகளின் வாயிலாகத்தான் இந்தச் செய்தியை அறிந்திருக்கின்றனர். இந்த விடயத்தை அவர்கள் ‘ஈழநாடு’விடம் உறுத்திப்படுத்தினர்.

அமெரிக்க பயணம் தொடர்பான செய்தியை எம். ஏ. சுமந்திரன் உறுதிப்படுத்தியிருக்கின்றார். சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு மற்றும் புதிய அரசியல் யாப்பு தொடர்பான விடயங்களை ஆராய்வதே இந்தப் பயணத்தின் நோக்கமென்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், இந்த இடத்தில், சில கேள்விகளும் குறுக்கிடுகின்றன. சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஆராய்வதற்காக அமெரிக்கா அழைத்திருப்பதாக - இந்தளவு பகிரங்கமாகக் கூறுவது, இராஜதந்திர ரீதியில் சரியான அணுகுமுறைதானா? இது சிங்கள - பௌத்த தேசியவாதிகள் மத்தியில் எவ்வாறான அதிர்வலைகளை ஏற்படுத்தும்? இது தென்னிலங்கையில் அமெரிக்கா தொடர்பான எதிர்ப்பு உணர்வை அதிகரிக்கப் பயன்படாதா?

இந்தக் கேள்விகள் தொடர்பில் அமெரிக்க தூதரகம்தான் அதிகம் சிந்திக்க வேண்டும். ஆனால், இந்த நிபுணர் குழுவில் இடம்பெறுபவர்களில் சுமந்திரனைத் தவிர ஏனையவர்கள் எவருமே அரசியல் பின்புலம் கொண்டவர்கள் அல்லர். தமிழரின் அரசியல் வரலாற்றோடு எந்த வகையான ஊடாட்டமும் இல்லாதவர்கள். மேலும், மக்கள் மத்தியில் எந்தவொரு நிலைப்பாட்டையும் கொண்டுசெல்ல முடியாதவர்கள். இவ்வாறானவர்கள் அமெரிக்கா செல்வதால் அரசியல் தீர்வு பிரச்னைகளை எவ்வாறு கையாள முடியும்? மேலும், இவர்கள் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களின் நம்பிக்கையை பெற்றவர்களும் அல்லர்.

உண்மையில் இந்தக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து கட்சிகளும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். இத்தனைக்கும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான டி. பி. எல். எவ். தலைவர் த. சித்தார்த்தன் திம்பு பேச்சில் பங்குகொண்ட ஒருவர். இவ்வாறானவர்கள் இருக்கின்றபோது கட்சி அரசியலுக்கும் தமிழர் அரசியலுக்கும் வெளியில் இருப்பவர்களை இவ்வாறான கலந்துரையாடல்களில் பங்குகொள்ளச் செய்வதன் மூலம் எந்தவொரு நன்மையும் ஏற்படப் போவதில்லை. மாறாக கூட்டமைப்புக்குள் மேலும் கருத்து முரண்பாடுகளுக்கும், பிளவுகளுக்குமே இது வழிவகுக்கும். இது அமெரிக்க தூதரகத்தின் தவறல்ல. இது முற்றிலும் சம்பந்தனின் தலைமைத்துவத்திலுள்ள குறைபாடு.

ஒரு தலைவர் என்பவர் - தோல்வி அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ள முன்வரவேண்டும். ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்திலும் புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவரப் போவதாக சம்பந்தன் ஐந்து வருடங்களை செலவு செய்தார். ஆனால், இறுதியில் எதுவும் நடக்கவில்லை. இப்போது ராஜபக்ஷக்கள் ஓர் அரசியல் யாப்பை கொண்டுவரப் போவதாகக்கூறி, அதனடிப்படையில் நேரத்தை செலவு செய்வது தொடர்பில் ஆராய்கின்றனர். கடந்த ஆட்சிக் காலத்தில் எவ்வாறு பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் ஆலோசனைகளை கருத்தில் கொள்ளாமல், சம்பந்தன் தவறு செய்தாரோ, அதனையே மீண்டும் செய்கின்றார்.

அமெரிக்காவின் ஆதரவைப் பெறுவது தவறானதல்ல. அது அவசியமானது என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. அமெரிக்காவின் தலையீடுகள் இல்லாதிருந்தால், 2012இல் இலங்கைமீதான பிரேரணையொன்றை கொண்டுவந்திருக்க முடியாது. தமிழர் பிரச்னை சர்வதேச மயப்பட்டத்தில் அமெரிக்காவின் பங்கே முதன்மையானது. ஆனால், சர்வதேச அரங்குகளை கையாளுகின்றபோது, கூட்டமைப்புக்குள் காணப்படும் தன்முனைப்பு வாதங்களை புறம்தள்ளி சம்பந்தன் தூரநோக்குடன் செயற்பட்டிருக்கவேண்டும்.

தான் ஒரு மூத்த தலைவர் என்பதை மற்றவர்கள் சந்தேகத்துடன் பார்க்கும் வகையில் சம்பந்தன் முடிவுகளை எடுக்கக்கூடாது. 2011இலும், சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் குழுவினர் அமெரிக்கா சென்றிருந்தனர். இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளை சந்தித்திருந்தனர். ஆனால், அப்போது இவ்வாறு நிபுணர் குழுவென்னும் பெயரில் சென்றிருக்கவில்லை. அப்போதும் ஜனநாயக கட்சியே ஆட்சியில் இருந்தது. மீண்டும் பைடன் தலைமையிலான ஜனநாயகக் கட்சி அதிகாரத்தில் இருக்கின்றபோது, மீண்டும் அமெரிக்கா செல்லவுள்ளனர். ஆனால், அன்றைய சூழலுக்கும், இன்றைய சூழலுக்கும் இடையில் பெரிய வேறுபாடுகள் உண்டு. அன்று கூட்டமைப்புக்குள் இந்தளவு முரண்பாடுகள் இருந்திருக்கவில்லை. இராஜதந்திர சமூகத்தினரும் இந்த விடயத்தை கவனிக்க வேண்டும். ஏனெனில், இராஜதந்திர சமூகத்தினரின், இராஜதந்திரம் வீணாகி விடக் கூடாது.

# அருட்தந்தை சிறில் காமினிமீது புலன் விசாரணை !

- அலசுவது இராஜதந்திரி -



*2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் குறித்து சர்வதேச கத்தோலிக்க சமூகத்துக்கு விளக்கமளித்தது தொடர்பாக வண. பிதா சிறில் காமினி குற்றப்புலனாய்வு பிரிவினரல் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் கைது செய்யப்படக்கூடிய சூழ்நிலைகளும் ஏற்படலாம் என்று பலராலும் கருதப்பட்டிருந்தது. இந்த நிலையில் கத்தோலிக்க மதகுருமார்களும், கன்னியாஸ்திரிகளும் நேற்று முன்தினம் கொழும்பில் பதாகைகளுடன் அருட்தந்தை சிறில் காமினியின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்குமாறு அமைதியான ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தனர்.*

*உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் இடம்பெற்று இரு வருடங்களாகிவிட்டன. ஆயினும், தலைநகரில், அதுவும் ஒரு முக்கிய மத நிகழ்வின்போது, ஓர் இடத்தில் மட்டுமல்ல மூன்று இடங்களில் ஏககாலத்தில் 300இற்கும் அதிகமானவர்களை பலியெடுத்த உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து இதுவரை எவ்வித ஆக்கபூர்வமான விசாரணைகளும் நடத்தப்படவில்லை. அத்துடன், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆணைக்குழு விசாரணைகூட ஒரு கண்துடைப்பாக இருந்ததே தவிர, எவ்வகையிலும் அந்த ஆணைக்குழு விசாரணை மூலமாக எவ்வித பயனும் ஏற்பட்டிருக்கவில்லை.*

*அருட்தந்தை சிறில் காமினி கடந்த மாதம் 23ஆம் திகதி பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தால் வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்களுக்கு இணையத்தளம் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மகாநாட்டில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்து விளக்கமளித்திருந்தார். இது தொடர்பாகவே சிறில் காமினி குற்றப்புலனாய்வு பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.*

*உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் குறித்து இலங்கை கத்தோலிக்க திருச்சபை தலைவரான பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஏற்கனவே துணிச்சலான கருத்துகள் பலவற்றையும் வெளியிட்டுள்ளார். அத்துடன், பேராயர் மல்கம் ரஞ்சித் உரிய விசாரணைகள் நடத்தப்படுவதில் தாமதங்கள் நிலவுவதையும் அடிக்கடி சுட்டிக்காட்டி தமது மன ஆதங்கத்தை வெளியிட்டு வருபவராக இருக்கின்றார்.*

*பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அண்மையில் கருத்து வெளியிடுகையில், தாம் கைதுசெய்யப்பட்டாலும் பரவாயில்லை. ஆனால், ஒருபோதும் உண்மையைக்கூற பின்நிற்கப்போவதில்லை என்று கூறியிருந்தார். பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து வெளிப்படுத்தி வரும் துணிச்சலான கருத்துகளுக்கு உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பரிசுத்த பாப்பரசர்கூட தமது ஆதரவை வெளியிட்டிருந்தார்.*

*பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஏற்கனவே சர்வதேச சமூகத்துக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக நேரடியாகவும், ஊடகங்கள் வாயிலாகவும் விளக்கங்களை வழங்கியுள்ளார். எனவே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றி சர்வதேச சமூகம் மிகத்தெளிவான விளக்கத்தை கொண்டுள்ள நிலையில் கடந்த மாதம் வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்களுக்கு அருட்தந்தை சிறில் காமினி, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் நடத்திய இணையத்தள மகாநாடு மூலமாக வழங்கிய விளக்கம் தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பது கவலைக்குரியதாகவே இருக்கின்றது.*

*இலங்கையில் வழிபாட்டுத் தலங்கள்மீது தாக்குதல்கள் நடத்தப்படுவது எதுவும் புதிதான விடயமல்ல. 1985ஆம் ஆண்டு மே மாதம் அநுராதபுரத்தில் புனித போதிமர சுற்றாடலில் தமிழீழ விடுதலைப் புலிகள் எண்பதுகளில் நடத்திய தாக்குதலில் ஏராளமான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.*

*1998ஆம் ஆண்டு கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர். கிழக்கில் காத்தான்குடி மசூதியில் நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் வடக்கே தேவாலயம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டுத்தக்குதல் போன்றவை 2009-ம் ஆண்டில் யுத்தம் முடிவுக்கு வரமுன்னர் நிகழ்த்தப்பட்ட வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்களாகும்.*

*ஆனால் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திலும் , நீர்கொழும்பு, மட்டக்களப்பு போன்றவற்றில் ஏக காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்து தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் நடத்தப்பட்டவையாக இருந்தன.*

*இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து இலங்கையின் கத்தோலிக்க திருச்சபை தெளிவாக அறிந்துவைத்துள்ளது. இதனையே அருட்தந்தை சிறில் காமினி வெளிநாட்டு வாழ் இலங்கையர்களுக்கு தெரிவித்திருந்தார்.*

*எது எப்படியிருந்தபோதிலும் புத்த பகவான் தமது போதனையில் சூரியன், சந்திரன், உண்மை என்பவற்றை எந்தவொரு சக்தியாலும் அழித்துவிட முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த உண்மைகள் வெளிவரும் போது அதன் சூத்திரதாரிகளும் வெளிச்சத்துக்கு வருவார்கள் என்பது நிச்சயம் என்றே கருதலாம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
பொல்லாதவர்களால் ஏற்பட்ட தொல்லைகள் இன்று நீங்கும். குடும்ப சூழலால் மனநிறைவும், நிம்மதியும் ஏற்படும். பண விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**இடபம்**
பணிகளை முனைந்து செய்வதால் அலுவலகத்தில் உங்களின் புகழ் கூடும். கையெழுத்தை தவிர்க்க வேண்டிய நாள். செலவுகளை சமாளிக்க கடன் வாங்காதீர்கள்.

**மிதுனம்**
அடுத்தவரின் மனம் நோகும்படி நடக்க வேண்டாம். மகிழ்ச்சியுடன் கூடிய பரபரப்பான சூழல் குடும்பத்தில் உருவாகும். உங்களிடம் வம்பு பேசியவர்கள் வாயடைக்கும்படி சம்பவம் நடக்கும்.

**கடகம்**
பொறுமையுடன் செயல்பட்டு வெற்றி இலக்கைத் தொடுவீர்கள். மகிழ்ச்சியான நாள். உங்களின் பழைய எதிர்பார்ப்புகள் நிறைவேறும். கோயில்களுக்கு செல்வீர்கள். எதிர்பாராத சந்திப்பு உண்டு.

**சிம்மம்**
ஆரோக்கியத்தில் அக்கறையுடன் இருப்பதால் நலமான நாள். உங்களிடம் வம்பு பேசியவர்கள் சிரமத்துக்குள்ளாவார்கள். பணத்தை கவனமாக கையாளவும். நல்ல நண்பர் கிடைப்பார்.

**கன்னி**
பணியில் கவனம் அதிகரிக்கும். பதவி உயர்வு பெறுவீர்கள். வேலைகளை இழுத்து போட்டு செய்வதால் அசதி வரும். ஊக்கத்தோடு செயல்படுவீர்கள். நீண்ட நாளாக இருந்த கவலை தீரும்.

**துலாம்**
பெருமை வந்து சேரும். பிரச்னை ஒன்று நல்லபடியாக முடியும். உற்சாகத்தோடு பணிபுரிந்து அதிகாரியின் பாராட்டை பெறுவீர்கள். தள்ளிப்போட்டுக் கொண்டு வந்த விஷயங்களை முடிக்கும் நாள்.

**விருட்சிகம்**
குடும்ப விஷயங்களில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். மற்றவர்களின் பிரச்னைகளை தீர்ப்பது பற்றி யோசிப்பீர்கள். உங்களின் சிந்தனை செயல் வடிவம் பெறும். நன்மை தேடி வரும்.

**தனுசு**
சிறு சிறு தடைகள் காரணமாக தேவையற்ற கவலைக்கு உள்ளாவீர்கள். இன்றைய நாள் அமைதியாக செல்லும். ஓய்வு அதிகரிக்கும். பயம் நீங்கும். சுவையான விருந்து உண்டு மகிழ்வீர்கள்.

**மகரம்**
சில தீயவர்கள் உங்களை விட்டு விலகுவது நன்மைக்கே. பல நாள் முயற்சி ஒன்று கைகூடுவதால் மகிழ்ச்சி ஏற்படும். நட்பு வட்டத்தில் ஏற்படும் விரிசல் உங்களை பாதிக்காது.

**கும்பம்**
பழைய முதலீடுகள் லாபம் தருவது பற்றிய செய்தி வரும். நண்பர் இருவர் உங்களுக்கு உதவி செய்வார். வீண் செலவு குறையும். தீயவர்களை விட்டு விலகுவீர்கள். நேற்றைய அதிருப்தி தீரும்.

**மீனம்**
சொத்து பற்றி முடிவு செய்வீர்கள். நகை வாங்குவீர்கள். பணியிடத்தில் மதியம் நல்லதொரு செய்தி வந்து சேரும். பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும். உங்களின் பொறுப்பு கூடுதலாகும்.

# சென்னையில் வெள்ள மீட்புப் பணிகளை தி.மு.க. அரசு முறையாக செய்யவில்லை

## நேரில் பார்த்த பின்னர் எடப்பாடி குற்றச்சாட்டு

*சென்னை, நவ. 10*

தி.மு.க. அரசு சென்னையில் வெள்ள பாதிப்பு மீட்பு பணிகளை சரிவர செய்யவில்லை என தமிழக எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

தொடர்ச்சியாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் தொடர்ந்து விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. கனமழையால், சென்னையில் பிரதான சாலைகளில் தண்ணீர் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடுகின்றன. தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி நிற்பதால் மக்கள் கடும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர். கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இதனிடையே, வெள்ளம் பாதித்த பகுதிகளில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி நேற்று ஆய்வு மேற் கொண்டார். சென்னை யின் பல பகுதிகளில் எடப்பாடி பழனிசாமி, வெள்ள நீரில் இறங்கி ஆய்வு மேற்கொண்டார். அங்குள்ள பொதுமக்களிடம் குறைகளையும் கேட்டறிந்தார். பொதுமக்களுக்கு அ.தி.மு.க. சார்பில் நிவாரண பொருட்களையும் வழங்கினார்.



அதன் பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறுகையில், “சென்னையில் வெள்ள பாதிப்பு மீட்பு பணிகளை தி.மு.க. அரசு சரிவர செய்யவில்லை. மழையால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அதிகாரிகள் சென்று ஆய்வு செய்யவில்லை. வெள்ளம் பாதித்த பகுதிகளில் மக்களுக்கு உணவு,தண்ணீர், மருந்து போன்ற பொருட்கள் கிடைக்கவில்லை” என்று கூறினார்.

# தி.க. தலைவர் வீரமணிக்கு கொரோனா

*சென்னை, நவ. 10*

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, அவரது மனைவி ஆகியோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு, சென்னையிலுள்ள மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி (வயது 88), கொரோனா வைரஸ் பரவல் தொடங்கியதில் இருந்து வெளியூர் பயணங்களை தவிர்த்து வந்தார். முக்கிய நிகழ்ச்சிகளுக்கு மட்டும் காரில் சென்று வந்தார்.



கொரோனா பரவல் குறைந்து வருவதை தொடர்ந்து கடந்த சில நாட்களுக்கு முன்பு அவர் ரெயில் மூலம் கோவை சென்றார். பின்னர், குன்னூரில் நடைபெற்ற கட்சி நிகழ்ச்சியில் பங்கேற்றார். இதன்பின்பு, ரெயில் மூலம் மீண்டும் சென்னை திரும்பினார்.

இந்தநிலையில் அவருக்கும், அவரது மனைவி மோகனாவுக்கும் திடீரென்று உடல்நலம் பாதிக்கப்பட்டது. இதனால் அவர்கள் கொரோனா பரிசோதனை செய்தனர். அப்போது, அவர்களுக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் சென்னை அப்பலோ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

# கருணாநிதிக்கு சென்னையில் நினைவிடம் 39 கோடி ரூபா செலவில் அமைக்கப்படும்

## அரசாணையை வெளியிட்டது தமிழக அரசு

*சென்னை, நவ. 10*

சென்னை மெரினா கடற்கரையில் கருணாநிதிக்கு நினைவிடம் அமைப்பது தொடர்பான அரசாணை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னதாக, தி.மு.க. முன்னாள் தலைவரும், தமிழக முன்னாள் முதல்வருமான கருணாநிதிக்கு மெரினாவில் நினைவிடம் அமைக்கப்படும் என தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

அப்போது அவர் பேசுகையில், “அரைநூற்றாண்டு காலத்துக்கு தமிழ்நாட்டின் நிரந்தரத் தலைப்புச் செய்தியாக இருந்தவர் கருணாநிதி. நின்ற தேர்தலில் எல்லாம் வென்றவர். 13 சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் தலைகுனியாதவர். 80 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் 60 ஆண்டு காலம் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தவர் கருணாநிதி. தோல்வி அவரைத் தொட்டதே இல்லை. அவர் இந்திய அரசியலை வழிநடத் திய அரசியல் ஞாநி. தமிழுக்கு செம்மொழி அந்தஸ்தைக் கொடுத்தவர்”



என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று நினைவிடம் அமைப்பது தொடர்பான அர சாணை வெளியிடப்பட்டுள் ளது. அதில் கூறப்பட்டுள்ளதா வது:

கருணாநிதி ஆற்றிய அரும்பணிகளைப் போற்றும் விதமாக, அவரது வாழ்வின், சாதனைகளை, சிந்தனைகளை மக்களும், வருங்காலத் தலைமுறையும் அறியக்கூடிய வகையில் நவீன விளக்கப் படங்களுடன் சென்னை காமராஜர் சாலை அண்ணா நினைவிடம் வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 39 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கருணாநிதிக்கு நினைவிடம் அமைக்கப்படும்.”

# சீரற்ற காலநிலை; 11 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 10

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இரண்டு வாரங்களில் நாட்டில் 11 மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதுவரை ஆயிரத்து 836 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 167 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கனமழை மற்றும் பலத்த காற்றினால் கிட்டத்தட்ட 700 வீடுகள் பகுதியளவிலும் 2 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் நிலவும் மழையுடனான வானிலை தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமேல், மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் அனுராதபுரம், திருகோணமலை, நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலும் சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.

இதேவேளை, மாத்தளை, பொலனறுவை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சில இடங்களில் சுமார் 100 மில்லிமீற்றர் வரையான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழையின் போது பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கம் ஏற்படும் என்பதனால் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# 13 மீனவர்களுடன் மாலைதீவில் ஒதுங்கியது இலங்கைப் படகு!

கொழும்பு, நவ. 10

இலங்கை மீன்பிடிப் படகு ஒன்று 13 மீனவர்களுடன் மாலைதீவில் கரை ஒதுங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் இருந்து மீன்பிடி நடவடிக்கைக்காக சென்றிருந்த ஒரு படகே இவ்வாறு மாலைதீவில் கரை ஒதுங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கரையொதுங்கியவர்கள் இலங்கை மீனவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றபோதும் படகு எங்கிருந்து புறப்பட்டது என்றோ அல்லது மீனவர்கள் இலங்கையின் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றோ உடனடியாக தெரிவிக்கப்படவில்லை.

இதேநேரம், தற்போது நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் இலங்கை இந்திய கடற்பரப்பு அதிக கொந்தளிப்பாக இருப்பதனால் படகுகள் திசைமாறிச் சென்றிருக்கக்கூடும் என கருதப்படுகின்றது. (அ)

# கிளிநொச்சியிலும் பரவலாக கனமழை

## இரு குளங்கள் வான்பாய்கின்றன



கிளிநொச்சி, நவ. 10

**கிளிநொச்சி மாவட்டத்திலும் பரவலாக கனத்த மழை பெய்துள்ளது. இந்த நிலையில் கனகாம்பிகைக் குளம், வன்னேரிக்குளம் ஆகியன அடைவு மட்டத்தை அடைந்து வான்பாய்ந்து வருகின்றன.**

கடந்த சில நாட்களாக பெய்து வந்த மழை காரணமாக கனகாம்பிகைக்குளம் வான்பாய ஆரம்பித்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் பெய்த பலத்த மழை காரணமாக வன்னேரிக்குளம் நேற்று வான்பாய ஆரம்பித்தது.

தொடர் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் குளங்களுக்கு நீர்வருகை அதிகரித்துள்ளது.

நேற்றுக் காலை 7 மணி வாசிப்பின் அடிப்படையில், கிளிநொச்சி மாவட்டத்துக்கான நீர்ப்பாசனக் குளங்களான,

36 அடி அடைவுமட்டம் கொண்ட இரணைமடுக்குளம் 24 அடி இரண்டு அங்குலமாக உயர்ந்துள்ளது.

26 அடி அடைவுமட்டம் கொண்ட கல்மடுக் குளம் 24 அடி மூன்று அங்குலமாகவும்,

12 அடி அடைவுமட்டம் கொண்ட பிரமந்தனாறு குளம் 9 அடி ஒரு அங்குலமாகவும்,

19 அடி அடைவுமட்டம் கொண்ட புதுமுறிப்பு குளம் 17 அடி ஐந்து அங்குலமாகவும்,

25 அடி அடைவுமட்டம் கொண்டஅக்கராயன்குளம் 18 அடி மூன்று அங்குலமாகவும்,

10 அடைவுமட்டம் கொண்ட கரியாலை நாகபடுவான் குளம் 4 அடி 8 அங்குலமாகவும்,

8 அடி ஆறு அங்குலம் அடைவுமட்டம் கொண்ட குடமுருட்டி குளம் 6 அடி ஒன்பது அங்குலமாகவும் உயர்ந்துள்ளது.

இதேவேளை, 10 அடி ஆறு அங்குலம் கொள்ளளவு கொண்ட கனகாம்பிகைக்குளம் அடைவுமட்டத்தை அடைந்து 5 புள்ளி ஐந்து அங்குலம் வான் பாய்ந்து வருவதுடன், 9 அடி ஆறு அங்குலம் அடைவு மட்டம் கொண்ட வன்னேரிக் குளம் அடைவுமட்டத்தை அடைந்து 3 அங்குலம் வான் பாய்ந்து வருகின்றது.

நீர் நிலைகளுக்கான நீர் வருகை தொடர்ந்தும் காணப்படுவதாலும், மாவட்டத்துக்கு மழை பெய்யும் சாத்தியக் கூறுகள் தொடர்ந்தும் இருப்பது தொடர்பில் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ள நிலையில் மக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் செயல்பட வேண்டும் எனவும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், நீர்நிலைகள், நீர்வடிந்தோடும் பகுதிகளுக்கு செல்வதைத் தவிர்க்குமாறும், தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இடர் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கிராம சேவையாளர் ஊடாக அல்லது, பாதுகாப்பு தரப்பினர் ஊடாக பாதுகாப்பை பெற்றுக்கொள்ளுமாறும், மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# யாழ். போதனா வைத்தியசாலையில் கனமழையால் சிகிச்சைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 10

கனமழையின் தாக்கத்தினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சாதாரண சிகிச்சை பெற வருவோர் சற்று தாமதமாக வருமாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்.குடாநாட்டில் பெய்துவரும் கனமழை மற்றும் தாதியர்கள், துணை மருத்துவ சேவை உத்தியோகத்தர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தின் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையின் கிளினிக் பிரிவு மற்றும் சாதாரண பிரிவுகளில் செயற்பாடு மந்த கதியில் இடம்பெற்று வருகிறது.

எனவே பொதுமக்கள் தற்போதுள்ள மழை குறைவடைந்த பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு சாதாரண சிகிச்சை பெறுவோர் தற்போதைய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்து அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கவேண்டாம்.

கிளினிக் பகுதி மற்றும் இருதய சிகிச்சை கிளினிக் பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி நிற்பதன் காரண மாக தற்போது சிகிச்சைகள் இடம்பெறாத நிலை காணப்படுகின்றது. எனவே பொதுமக்கள் சாதாரண சிகிச்சை பெற வருவோர் மழை முடிந்த பின்னர் வருகை தந்து சிகிச்சையை பெற்றுக்கொள்ள முடியும்.

எனினும் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் ஏனைய விசேட வைத்திய சேவைகள் அனைத்தும் இடம்பெறுகின்றன. எனினும் சாதாரண சிகிச்சைகள் மாத்திரம் தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளன-என்றார். (அ-03)

# 70,633 சுற்றுலாப் பயணிகள் இவ்வருடம் இலங்கை வருகை

கொழும்பு, நவ. 10

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் நவம்பர் 7ஆம் திகதி வரை பல்வேறு நாடுகளிலிருந்தும் 70,633 உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் மாத்திரம் 13,547 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதுடன் ஒக்டோபர் மாதத்தில் அந்த எண்ணிக்கை 22,771 ஆக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நேற்று முன்தினம் முடிவடைந்த ஒரு வார காலத்தில் 9,454 உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும் இக்காலங்களில் அதிகமான உல்லாசப் பிரயாணிகள் நாட்டுக்கு வருகை தருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்கா, சுவிற்சர்லாந்து, ஜேர்மன், கனடா, பிரான்ஸ், பாகிஸ்தான், மாலைதீவு ஆகிய நாடுகளிலிருந்தே இக்காலங்களில் அதிகளவு உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டார். (அ)



# கேகாலையில் மணல் மேடு சரிந்து தாய் மற்றும் இரு பிள்ளைகள் பலி!

கொழும்பு, நவ. 10

கேகாலை மாவட்டம் - ரம்புக்கனை, தொம்பேமடை பிரதேசத்தில் மணல் மேடு சரிந்ததில் அதில் கிக்கி 36 வயதான தாய் மற்றும் அவரது 8 மற்றும் 14 வயதான இரு பெண் பிள்ளைகள் உட்பட மூவர் உயிரிழந்தனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்தக் குடும்பத்தின் தலைவர் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மண் மேடு சரிந்து உயிரிழந்த மூவரின் சடலங்களும் மீட்கப்பட்டு மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மணல் மேடு சரிந்து வீட்டின் மீது விழுந்ததில் வீடு முற்றாக மூடப்பட்டது. இதில் வீட்டிலிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்பட்டபோதும், ஒருவர் மட்டும் தேடுதலின் போது காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ)





# குடாநாடும் வெள்ளத்தில்!

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். மாவட்டத்தில் பெய்வது வரும் கனமழை காரணமாக மாவட்டத்தின் பல்வேறு தாழ்நிலப் பகுதிகளும் நீரில் மூழ்கியுள்ளன.

யாழ்.நகரிலுள்ள ஸ்ரான்லி வீதி, கோவில் வீதி உட்பட பிரதான வீதிகளும், நகரை அண்டிய புறநகர்ப் பகுதிகளும் நீரில் மூழ்கியுள்ளன.

குடியிருப்புக்குள் தேங்கியுள்ள வெள்ள நீரை வெளியேற்றும் நடவடிக்கையில், யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் பிரதேச சபையினர் கனரக வாகனங்களின் உதவியுடன் பணியாற்றினர்.

வெள்ள நீர் வழிந்தோடமுடியாதவாறு தடைப்பட்டுள்ள கால்வாய்களை சுத்தப்படுத்தும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் நேற்று இரவு முதல் பெய்து வரும் அதிக மழை வீழ்ச்சி காரணமாக சங்கானை, நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் 149 குடும்பங்களை சேர்ந்த 460 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என, யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் என் சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

சங்கானை மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மாத்திரம் அனர்த்த பாதிப்பு விபரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சங்கானை பிரதேச செயலகப் பிரிவின் ஜே.179 கிராம சேவகர் பிரிவில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 118 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 4 குடும்பத்தினர் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனரென தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# வாகன உதிரிப்பாகங்களின் இறக்குமதிக்கு தடையில்லை

கொழும்பு, நவ. 10

வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்கு இது வரை தடை விதிக்கப்படவில்லை என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்களின் விலை பெருமளவில் அதிகரித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் நேற்று பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதியை வலுப்படுத்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

அத்தோடு வாகன உதிரிப் பாகங்களின் விலையில் வரம்பற்ற அதிகரிப்பு பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

# குருநாகலிலும் மண்சரிவு! 23 வயது யுவதி உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 10

குருநாகல், நாரம்மல, வெள்ளொருவ பகுதியில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் 23 வயதான யுவதி ஒருவர் பலியானார்.

சீரற்ற காலநிலையால் நாட்டில் சில பகுதிகளில் மண்சரிவு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கேகாலை, ரம்புக்கனை பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் பலியானார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நான்காவது அலையை நாடு அண்மித்துள்ளது!

## பொது சுகாதார பரிசோதகர் சங்கம்



கொழும்பு, நவ. 10

**இலங்கை தற்போது நான்காவது அலையை அண்மித்துக் கொண்டிருக்கிறது. இதே நிலைமை தொடர்ந்து தீவிரமடைந்து மீண்டும் நாட்டை முடக்கி, கல்வி உள்ளிட்ட அனைத்துத் துறைகளையும் ஸ்தம்பிதமடைய செய்வதா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்.**

**எனவே, மக்கள் சுகாதார விதிமுறைகளை முறையாக பின்பற்றினால் அபாய நிலைமையிலிருந்து ஓரளவிற்கு பாதுகாப்பு பெற முடியும் என்று இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

இலங்கை தற்போது நான்காவது அலையை அண்மித்துக் கொண்டிருக்கிறது. உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் கொவிட் வைரஸ் பரவல் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் மக்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுவதில் காணப்படும் பலவீனம், போக்குவரத்துடன் தொடர்புடைய நிறுவனங்களில் காணப்படும் பலவீனம், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் சுகாதார விதிமுறைகளை முறையாக பின்பற்றாமை உள்ளிட்ட காரணிகளால் தற்போது தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இதேநிலைமை தொடர்ந்து தீவிரமடைந்து மீண்டும் நாட்டை முடக்கிய கல்வி உள்ளிட்ட அனைத்து துறைகளையும் ஸ்தம்பிதமடையச் செய்வதா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

எனவே, மக்கள் சுகாதார விதிமுறைகளை முறையாக பின்பற்றினால் அபாய நிலைமையிலிருந்து ஓரளவிற்கு பாதுகாப்பு பெற முடியும். அவ்வாறில்லை எனில் நான்காவது அலையில் பாரிய நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என்பது தெளிவாகிறது.

பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த வாரத்தில் சில பாடசாலைகளில் மாணவர்கள் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் பெற்றோர் இது தொடர்பில் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இவை தொடர்பில் நாம் தீவிர கண்காணிப்பு செலுத்தி வருகின்றோம். மாறாக ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் கட்டுப்பாட்டை மீறி பாடசாலைகளில் கொவிட் வைரஸ் பரவுமாயின் உரிய ஆலோசனைகளை வழங்கி அவ்வாறான பாடசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

# கிளிநொச்சிக்கு சுத்திகரித்த குடிதண்ணீர் வழங்குவதில் தொடர்ந்தும் பெரும் சிரமம்!

கிளிநொச்சி, நவ. 10

கிளிநொச்சியில் அதிகரித்த மழை காரணமாக சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை வழங்குவதில் தொடர்ந்தும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

எதிர்பார்க்கப்படாத காலநிலை காரணமாக பெய்து வரும் அதிகரித்த மழை காரணமாக கிளிநொச்சி குளத்துக்கு அதன் நீரேந்து பகுதிகளிலிருந்து அதிகளவான கலங்கிய நீர் வருவதனால் குடிதண்ணீருக்கான நீரை சுத்திகரித்து வழங்குவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மட்டுப்படுத்தப்பட்ட குடிதண்ணீர் விநியோகமே மேற்கொள்ளப்படும் என கிளிநொச்சி மாவட்ட நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி முல்லைத்தீவு பொறியியலாளர் எந்திரி எஸ். சாரங்கன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கான குடிதண்ணீர் கிளிநொச்சி குளத்திலிருந்தே பெறப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தற்போது பெய்துவரும் மழை காரணமாக கிளிநொச்சி குளத்துக்கு அதன் நீரேந்து பகுதிகளிலிருந்து அதிகம் கலங்கிய நீர் வருவதால் பிரதான நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் தற்போது கிளிநொச்சிக்கான குடிதண்ணீர் விநியோகத்தை சீராக வழங்க முடியாதுள்ளது. நாளாந்த நீர்த் தேவையின் மூன்றில் ஒரு பகுதியை மாத்திரமே தற்போது வழங்க கூடியதாக உள்ளது. இதன் காரணமாக பொதுமக்கள் நீரை சேமித்தும், சிக்கனமாகவும் பயன்படுத்துவதோடு, குடிதண்ணீருக்கு கொதித்தாறிய நீரை பயன்படுத்துமாறும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பொறியியலாளர் எந்திரி எஸ். சாரங்கன் அறிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக மழை பெய்து கிளிநொச்சி குளத்துக்கான நீர் கலங்கிய நிலையில் வருமாயின் எதிர்காலத்திலும் இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட நீர் விநியோக நிலைமையே ஏற்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இவ்விடயம்தொடர்பில்மேலதிக தகவல்களுக்கு 021 2283981 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (அ)

# பொலித்தீன் பைகளின் விலைகளிலும் மாற்றம்

கொழும்பு, நவ. 10

உற்பத்திச் செலவு அதிகரிப்பு காரணமாக பொலித்தீன் பைகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை பொலித்தீன் உற்பத்தியாளர்கள் மற்றும் மீள் சுழற்சியாளர்கள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

சர்வதேச சந்தையில் மூலப்பொருட்களின் விலை அதிகரித்துள்ளமையே இதற்கு முக்கிய காரணம் என குறித்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# மன்னாரில் கடுமையான மழை! பல கிராமங்கள் வெள்ளத்தில்!!

## 12,350 நபர்கள் பாதிப்பு

கொழும்பு, நவ. 10

**நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையின் காரணமாக பெய்து வரும் கடும் மழையால் மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 3,501 குடும்பங்களைச் சேர்ந்த 12,350 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.திலீபன் தெரிவித்தார்.**



மன்னார் மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வரும் நிலையில் மன்னார் மாவட்டத்தில் தற்போது அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மன்னார் பிரதேச செயலர் பிரிவில் தலைமன்னார், பேசாலை, தாழ்வுபாடு, மன்னார் சாந்திபுரம், சௌத்பார், ஜிம்ரோண் நகர் உள்ளிட்ட மன்னார் நகர் பகுதியில் உள்ள பல கிராமங்கள் மழை நீரில் மூழ்கியுள்ளன.

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் மடுக்கரை உள்ளிட்ட சில கிராமங்களில் மக்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் விடத்தல் தீவு, தேவன்பிட்டி உள்ளிட்ட கிராமங்களிலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் விவசாய நிலங்களில் மழை வெள்ள நீர் சூழ்ந்து கொண்டு உள்ளமையினால் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். கடற்கரையில் அமைந்துள்ள மீன் வாடிகள் சேதமாகி உள்ளதோடு, படகுகள் சேதமடைந்துள்ளன.

மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அதிகாரிகள் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 3002 குடும்பங்களைச் சேர்ந்த 10,631 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 89 பேர் இடம் பெயர்ந்து 2 தற்காலிக நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 325 குடும்பங்களைச் சேர்ந்த 1056 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 16 நபர்கள் இடம்பெயர்ந்த நிலையில் நலன்புரி நிலையம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 39 நபர்களும், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 166 குடும்பங்களைச் சேர்ந்த 628 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் மக்கள் இடம்பெயரவில்லை.

மாவட்டத்தில் தற்போது வரை 3501 குடும்பங்களைச் சேர்ந்த 12,350 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 105 நபர்கள் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து 3 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.திலீபன் தெரிவித்தார். (அ)

### சீன சேதனப் பசளை விவகாரம்;

# விவசாய அமைச்சரை சந்திக்க கொழும்பு வந்த சீன நிறுவனம்!

கொழும்பு, நவ. 10

சீன சேதனப் பசளை தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு சீனத் தூதுவருக்கு தெரிவிக்கப்பட்டதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

சீன சேதனப் பசளை நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை விவசாய அமைச்சுக்கு விஜயம் செய்து இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளது.

எவ்வாறாயினும், இந்த விவகாரம் தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்கு நிலுவையில் உள்ளதை மேற்கோள் காட்டி அமைச்சர் மேலதிகமாக கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார்.

சீனத் தூதுவர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க விவசாய அமைச்சில் குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

மேலும் இந்த விடயம் குறித்து அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்க முற்பட்டபோதும், சீனத் தூதரக அதிகாரிகள் அதனை தடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சீன நிறுவனம் எந்த அடிப்படையில் உள்ளூர் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போகிறது என்ற ஊடகவியலாளர்களின் கேள்விக்கும் சீனத் தூதரக அதிகாரிகள் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் நேற்று சடுதியாக உயர்வு!

## விக்டோரியா நீர்த்தேக்க வான் கதவுகள் திறப்பு

கொழும்பு, நவ. 10

மத்திய மலைநாட்டில் பெய்து வரும் மழை காரணமாக மலையகத்தில் இருக்கின்ற நீரேந்தும் பகுதிகளில் நீர் மட் டம் அதிகரித்து காணப்படுகின்றது.

கடந்த தினங்களாக பெய்து வந்த மழையினால் நீரோடைகள், ஆறுகள் என பெருக்கம் எடுத்து நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்து காணப்பட்டது.

அந்தவகையில் விக்டோரியா நீர்த்தேக்கதின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதன் காரணமாக இரண்டு வான்கதவுகள் நேற்று இரவு முதல் திறக்கப்பட்டுள்ளது. மேலும் ,இதன் காரணமாக குறித்த நீர்த்தேக்கத்திற்கு தாழ் நிலப் பகுதிகளில் வாழும் மக் கள் மிகுந்த அவதானமாக செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

# ரணிலை ஆலோசகராக நியமித்துக்கொள்ளுங்கள்

## சஜித்துக்கு ஆலோசனை கூறிய மஹிந்தானந்த

கொழும்பு, நவ. 10

"சிரேஷ்ட அரசியல் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை, ஆலோசகராக நியமித்துக்கொள்ளுங்கள். அப்போது சிறந்த ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே.



பாராளுமன்றத்தில் நேற்று சீன உரக்கப்பல் தொடர்பிலும், விவசாயிகளின் பிரச்னைகள் சம்பந்தமாகவும் சஜித் பிரேமதாஸ கேள்விகளை எழுப்பினார்.

இதன்போதே விவசாயத் துறை அமைச்சர், மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார்.

"ரணிலை சந்திக்கவும். வெற்றியை வழங்கி மன்னிப்பு கோரவும். அவரிடம் ஆலோசனை பெறவும். அப்போது சரியான கேள்விகளை எழுப்பலாம்."- என்றார் அமைச்சர் மஹிந்தானந்த.

அத்துடன், விவசாயிகளை இந்த அரசு ஒருபோதும் கைவிடாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# கைதடியில் ஹைஏஸ்வான் குடை சாய்ந்து விபத்து

## 10 பேர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 10

கைதடி பகுதியில் ஹைஏஸ் வாகனம் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 10 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

யாழ். குடாநாட்டில் கனமழை பொழிந்து வரும் நிலையில் கொழும்புத்துறையில் இருந்து பளை நோக்கி பயணித்த ஹைஏஸ் ரக வாகனம் மழையினால் கட்டுப்பாட்டை இழந்து குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது.

இதனால் அதில் பயணம் செய்த 10க்கும் மேற்பட்டோர் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-03)






> அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் கல்வி மீது அடக்குமுறை, வெளி நபர்களால் உண்டாக்கப்படும் கட்டுப்பாட்டொழுக்கம், சர்வாதிகாரம், கண்காணிப்பு போன்றவற்றைத் திணிக்க எத்தனித்துள்ளன.

**சிவமோகன் சுமதி**

# கல்வியில் ஜனநாயகம் அவசர நிலைகளும் புதிய வெளிப்பாடுகளும்

கடந்த சில மாதங்களில் கோவிட் நெருக்கடியில் எமது நாடு சிக்குண்டதையும் எமது பொருளாதாரம் வீழ்ச்சி கண்டதையும் கண்கூடாகப் பார்த்தோம். இவற்றுக்கு மத்தியில் ஏராளமான ஆர்ப்பாட்டங்களும் பதில்க் கிளர்ச்சிகளும். இதனுடன் தொடர்புடைய எழுத்தாளர்கள் பலரும் ஏறக்குறைய கடந்த ஆண்டு பூராகவும் இந்த நோய்த் தொற்றினால் புதிதாகத் தோன்றிய மற்றும் மேலும் தீவிரப்படுத்தப்பட்ட பிரச்னைகள் தொடர்பாகத் தர்க்க ரீதியான கேள்விகளை எழுப்பியிருந்தனர். இவற்றுள் கல்வி மீது காலப் போக்கில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தகூடிய பிரச்சினைகள் பிரதானமானவை.

இங்கு தற்சமயம் உள்ள நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தல் முறைகள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மூடப்படுதல் போன்றவை பற்றிக் கலந்துரையாடப்படுகின்றது. இவ்வாறான தற்காலிகச் சிக்கல்கள் மட்டுமல்லாது குடிமை மற்றும் பொது மக்கள் கலாசாரத்தின் ஆக்கவளமுடைய சக்தி என்ற வகையில் எமது கல்வி முறையின் தொழிற்பாடு பற்றியும் கேள்விகள் தொடுக்கப்பட்டுள்ளன. எமது கல்வி முறையை, குறிப்பாக உயர் கல்வியைப் பீடித்திருக்கும் முக்கிய பிரச்சினைகளின் பால் கவனம் செலுத்துவதனூடாக ஒரு தத்துவார்த்த ரீதியில் பாகுபடுத்தப்பட்டு சுருக்கப்பட்ட கலந்துரையாடலை இக் கட்டுரையில் முன்வைக்கின்றேன்.

**வெளிப்படும் ஜனநாயகத்தின் பணி: இராணுவமயமாக்கலின் நீக்கம்**

அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் கல்வி மீது அடக்குமுறை, வெளி நபர்களால் உண்டாக்கப்படும் கட்டுப்பாட்டொழுக்கம், சர்வாதிகாரம், கண்காணிப்பு போன்றவற்றைத் திணிக்க எத்தனித்துள்ளன. இவர்களது இவ் வெண்ணங்கள் கொத்தலாவல சட்டத்திற்கெதிரான போராட்டங்களூடாக வெளிப்படுத்தப்பட்டன. இவ்வாறான சக்திகள் பல்கலைக்கழகங்களிலும் ஏனைய கல்வி நிலையங்களிலும் ஏற்கனவே நிலவி வந்துள்ளன.

கண்காணிப்புத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் கல்வி வட்டாரங்களில் இடம்பெறும் ஒவ்வொரு நடவடிக்கையும் மேற்பார்வை செய்யப்படுகின்றது. பாடத்திட்டத்தை உன்னிப்பாக மேற்பார்வை செய்தல், வேறெங்கோ உருவாக்கப்படும் கொள்கைகள் கல்வியாளர்கள் மீது திணிக்கப்படுதல், சுற்றறிக்கைகள், CCTV கமராக்கள், உடல் சோதனைகள், தடையரண்கள், சோதனைச் சாவடிகள் என இதில் உள்ளடங்குபவை பல. பழையதும் புதியதும் கலந்த இந் நடவடிக்கைகள் தனியார்மயமாக்கல் மூலம் எமது பல்கலைக்கழகங்கள் மெல்ல ஆக்கிரமிக்கப்படுவதை எடுத்துக்காட்டுகின்றன. நிதி ஒதுக்கீடு தொடர்பான அரச கொள்கைகளும், செயற்குறிப்புகளும் கூட இதனை வெளிப்படுத்துகின்றன.

கல்வி வட்டாரங்கள் எப்போதும் ஒரு படிநிலை முறையுடன் காணப்படுவதோடு கல்விச் சீர்திருத்தங்கள் இதனைச் சரி செய்ய எடுக்கும் முயற்சிகளும் அற்பசொற்பமாகக் காணப்படுகின்றன. கல்வியில் கீழ் நிலையிலிருந்து மேல் நோக்கி இடம்பெறக்கூடிய மாற்றுத் திட்டங்களைப் புறக்கணிப்பதன் மூலம் இவை வர்க்கம், இனம், பால், மற்றும் ஏனைய சமூகப் பிரிவினைகளை மேலும் விரிவுபடுத்தியுள்ளன. பாடத்திட்டங்களை ஒத்திசைவுப்படுத்தி அதனை வெறும் தேர்ச்சிகளினதும் ஆற்றல்களினதும் திரட்டாக மாற்ற முயலும் தற்போதைய செயற்திட்டத்தில் பாலியல் வன்முறைகள், சிறுபான்மை மற்றும் பெண்கள் புறந்தள்ளப்படுதல் போன்ற பிரச்னைகள் மேலும் மறைக்கப்பட்டு விடுகின்றன.

கல்வியை இராணுவமயப்படுத்தல் எனும் விடயத்தை நாம் தேசம், வரலாறு, தற்போதைய சூழ் நிலை போன்றவற்றின் அடிப்படையில் புரிந்துகொள்ள வேண்டும். இராணுவமயமாக்கல் என்பது புதிதாக உருவானதொன்றல்ல. பல்லாண்டு காலமான இன வேறுபாடுகள், யுத்தம் மற்றும் அதன் பின்விளைவுகளால் இராணுவ நிறுவனங்கள் தேசத்தின் ஆட்சி முறையின் மையமாகத் தாபிக்கப்பட்டுள்ளன. வடக்கிலும் கிழக்கிலும் யுத்தத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இராணுவமானது சாதாரண மக்களின் நிலங்களை ஆக்கிரமித்ததோடு மட்டுமல்லாது நிர்வாகம், பொருளாதாரம், ஆட்சியின் உயர் நிலைகள் போன்ற அனைத்திலும் தடம் பதித்தது.

யுத்தத்திற்குப் பிற்பட்ட ஆரம்ப வருடங்களில் வடக்கிலும் கிழக்கிலும் குடிமக்கள் நிறுவனங்கள் இராணுவத்தால் மேற்பார்வை செய்யப்பட்டன. முன்னாள் இராணுவ அதிகாரிகள் ஆளுநர்களாகப் பதவியேற்றனர். இராணுவமானது பொருளாதாரத்தில் ஈட்டுபட்டதோடு முதலாளிகளாகவும் உருமாற ஆரம்பித்தது. குடிமக்கள் அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் இராணுவத்தின் ஈடுபாடு இயல்பாக்கப்பட்டமை பல்கலைக்கழக வட்டாரங்களின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பைத் “தேசிய பாதுகாப்பு” என்ற போர்வையின் கீழ் கண்டனமின்றி இடம்பெற வழிவகுத்தது. இதற்குப் பின்வரும் சந்தர்ப்பத்தை உதாரணமாக முன்வைக்கலாம். http://www.sundayobserver.lk/2019/09/15/opinion/removal-vice-chancellor-university-jaffna-and-politicization-higher-education.

வடக்கிலும் கிழக்கிலுமுள்ள இராணுவங்கள் உண்மையில் நவ தாராளவாத நிறுவனங்களாக இருக்கவில்லை. இருப்பினும் இவை கல்வியில் திட்டமிட்ட கருத்தியல் நடவடிக்கைகள், தனியார்மயமாக்கல், இராணுவமயமாக்கல், கண்காணிப்பை அதிகரித்தல் போன்றவற்றைத் தோற்றுவிப்பதோடு மேற்பார்வையும் செய்கின்றன.

கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டொழுக்க முறைகள் அபத்தமானவையாக இருப்பினும் அவை தொடர்பாக நாம் வியப்படைவதில்லை. கொத்தலாவல பல்கலைக்கழகமானது அப்பட்டமான அடக்குமுறையைப் பிரதிபலிக்கின்றது எனத் தோன்றலாம். எனினும் கொத்தலாவல சட்டமோ, இராணுவமயமாக்கல் என்ற விடயம் இனங்காணப்பட்டு பெயரிடப்படுவதோ இடம்பெறுவதற்கு முன்னரே எமது வாழ்க்கை முறைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை நாம் இராணுவம் என்ற நிறுவனத்திடம் ஒப்படைத்துவிட்டோம்.

**தனியார்மயமாக்கலின் பின்னுள்ள கருத்தியலும் இராணுவமயமாக்கலும்**

இராணுவமயமாக்கலினுள் தனியார்மயமாக்கல் என்பது லாவகமாகப் புகுத்தப்பட்டுள்ளமையைக் கொத்தலாவல சட்டமானது தெளிவாக வெளிப்படுத்துகின்றது. வேலைக்கமர்த்தக்கூடிய தன்மை, உயர் கல்வியில் மென் திறன்கள், செயற்றிறன், கேள்வி ஆகிய ஜனரஞ்சகவாதிகளின் சொல்லாண்மைகளையே இந்தச் சிக்கலான மேலாதிக்க முறைமையாகக் கொண்டுள்ளது. இத் துறையின் விமர்சன சிந்தனையாளர்கள் பலரும் கூட எமது கல்விமுறையின் இன்றியமையாத கூறுகளைக் கதைக் குறிப்புக்களாக்கும் போக்கில் சிக்கியுள்ளனர்.

தற்போதைய ஆய்வுகளும் கூட ஜனரஞ்சகவாதச் சொல்லாண்மைகளால் வடிவமைக்கப்படுகின்றன. கலைப் பிரிவுக் கல்வியில் சீர்திருத்தங்களைக் கட்டியெழுப்பப் பயன்படுத்திய வலுவற்ற மூலக்கூற்றுக்களை கலைக் கல்வி மீதான தணிக்கை அலுவலக அறிக்கை பறைசாற்றுகின்றது (https://island.lk/myth-of-unemployable-arts-graduates/). ”குப்பிடாக்” எழுத்தாளர்கள் பெரிதும் எதிர்க்க முயலும் வேலைக்கமர்த்தக்கூடிய தன்மை எனும் கோட்பாட்டைப் பல இடங்களிலும் காணலாம். கல்வி மற்றும் உயர் கல்வி தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் சீர்திருத்தங்கள் எவ்வாறு இடம்பெற வேண்டுமென்பதைக் கல்வியாளர்களன்றி உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்கள் தீர்மானிப்பது எம்மை மேலும் குழப்பத்திலாழ்த்துகின்றது.

**வெளிப்பாடுகள்: மேலாதிக்கத்திற்கெதிரான போராட்டம்**

ஜனநாயக ரீதியானோர் என்ற வகையில் எமது நிலைப்பாடானது முரண்பாடுகள் மிக்க இந்த நிச்சயமற்ற நிலையில் தங்கியுள்ளது. இது எமது குறிக்கோளைப் பிரதிபலிக்கும் ஒரு வினைத்திறனான கூற்றாகும். இந்த நோய்த் தொற்று நிலைமையில் தாபிக்கப்பட்ட அவசர வழக்கங்கள் மத்தியில் ஜனநாயகத்தைக் கோரிப் புதுப்பிக்கப்பட்ட குரல்கள் எழுவதை இது தூண்டுகின்றது. மேலாதிக்கமுறையை விலக்கக் கோரிய கிராம்ஷியைப் (Gramsci) பொறுத்தவரையில் கல்வியை ஜனநாயகப்படுத்துவது ஒரு அரசியல் தேவையாகும்.

கல்விச் சீர்திருத்தங்கள் பலவற்றினதும் மேலோட்டமான தன்மைக்கான காரணம் கல்வி மீதான தத்துவ மற்றும் அரசியல் ரீதியான ஆராய்ச்சிகளின் பற்றாக்குறையாகும். இன்று எமது ஆரம்பஸ்தானமாக இருப்பது இலவசக் கல்வியே என நான் இங்கு வாதாடுகின்றேன். சமூகவியல் மற்றும் அரசியல் பரிசீலனைகள், நவதாராளவாதச் சீர்திருத்தங்களை எதிர்கொள்ளல், பாடத்திட்டம் மற்றும் கல்விமுறை தொடர்பான சீர்திருத்தங்கள் என்பவற்றிற்கு இது அடிப்படையாக அமைகின்றது. மேலாதிக்கத்திற்கெதிரான இப் போராட்டத்தின் உந்துசக்தியாகவிருப்பது இலவசக் கல்வியாகும்.

கொத்தலாவல சட்டத்திற்கெதிரான குருவுயுவின் நடவடிக்கைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6வீ இற்கான போராட்டம் மற்றும் மில்லியன் கையெழுத்துப் போராட்டம் போன்றவற்றை நினைவுபடுத்துகின்றன. இன்று கல்வி தொடர்பான கேள்விகளோடு ஆசிரியர்களின் சக்திவாய்ந்த கூட்டம் போராட்டத்தில் இறங்கியுள்ளது. இவ்வாறான போராட்டங்களை நீண்ட காலம் தொடர முடியாதிருக்கலாம். போராடுவோர் அகத்தே பிளவுபட்டுக் காணப்படலாம்.

இருப்பினும் மேலாதிக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கான களமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இப் போராட்டமானது கல்வி தொடர்பான கலந்துரையாடல்களின் எல்லைகளை விரிவுபடுத்தித் தனியார்மயமாக்கல் முதற்கொண்டு அதிகாரப் படிநிலைகள் வரை பல்வேறுபட்ட குரல்களையும் உள்ளடக்கும் சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது. இங்கு உடைமை, ஓரங்கட்டப்படல், பாடத்திட்டமும் அதனைப் பெறக்கூடிய தன்மையும், மொழிகள், பால் நிலை, பாலியல் வன்முறை, பகிடிவதை போன்றவை பற்றிய கலந்துரையாடல்களுக்குக் களமமைக்கப்பட வேண்டும். அதாவது இலவசக் கல்வி மற்றும் அதனால் உண்டாகும் முன்னோக்கிய நகர்வுகளுக்கு இடமளிக்கப்பட வேண்டும்.

**எழுத்தாளர் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலப் பிரிவில் கடமையாற்றுகின்றார்.**

**மொழி பெயர்ப்பு: கோபிகா சிவகுமார்**



# நம்பிக்கை தரும் கொரோனா மாத்திரைகள்

**கு. கணேசன்**

**“ தடுப்பூசிகள் செலுத்திக் கொண்டவர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால், பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த கொரோனா மாத்திரைகளின் பயன்பாடு அவசரமாகத் தேவைப்படுகிறது எனவும், தடுப்பூசிகள் மிகக் குறைவான அளவில் செலுத்தப்பட்டுள்ள ஏழை மற்றும் நடுத்தர நாடுகளில் கொரோனா தொற்றாளர்களுக்கு இந்த மாத்திரைகளைப் பயன்படுத்தித் தொற்றைக் கட்டுப்படுத்தலாம் எனவும் வல்லுநர்கள் யோசனை கூறியுள்ளனர்.**

கொரோனாவுக்கு எதிரான போரில், உலக நாடுகள் தடுப்பூசிகளைப் பேராயுதமாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கும் வேளையில், இரண்டு வகை மாத்திரைகள் புதிய ஆயுதங்களாக வந்திருப்பது கொரோனா சிகிச்சையில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது.


அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மெர்க் நிறுவனம், ரிட்ஜ்பேக் பயோதெரபியூடிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தயாரித்துள்ள ‘EIDD 2801’ மாத்திரைக்கு பிரிட்டன் அரசு அவசரகாலப் பயன்பாட்டுக்கு அனுமதி அளித்துள்ளது. இது அட்லாண்டாவில் உள்ள எமோரி பல்கலைக் கழக ஆய்வாளர்களால் உருவாக்கப்பட்டது.

தற்போது கொரோனா தொற்றாளர்களுக்கு வழங்கப்படும் ரெம்டெசிவிர், டெக்சாமெத்தசோன், ‘ஒற்றைப் படியாக்க எதிரணு மருந்து’ (Monoclonal antibody) ஆகியவற்றின் வரிசையில் புதிதாக இந்த மாத்திரையும் சேர்ந்திருக்கிறது. ‘மோல்னுபிரவிர்’ (Molnupiravir) என்பது இதன் வணிகப் பெயர். பிரிட்டனில் இது ‘லேகேவ்ரியோ’ (Lagevrio) எனும் பெயரில் சந்தைப்படுத்தப்படுகிறது. முதன் முதலில் கொரோனாவுக்கு எதிராக வழங்கப்படும் வாய்வழி வைரஸ் மாத்திரை என்பது இதன் தனித்துவம்.

கொரோனா தடுப்பூசிக்கு முதன்முதலில் அனுமதி அளித்த நாடு பிரிட்டன். ஆனாலும், அங்கு கொரோனா பெருந்தொற்றுப் பரவல் இன்னமும் நீடிக்கிறது. அதைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் அந்த நாட்டுக்கு இருக்கிறது. அதனால், இந்தப் புதிய மருந்துக்கு அனுமதி அளித்திருக்கிறது. இந்த வகையில் கொரோனா தொற்றுப் பரவல் ஏறுமுகத்தில் இருக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உள்ளிட்ட உலக நாடுகளிடத்திலும் இது முக்கியத்துவம் பெற்றுவருகிறது. இந்தியாவில் இதைத் தயாரிக்கவும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

மோல்னுபிரவிர் மாத்திரை கொரோனா தொற்றைத் தொடக்கத்திலேயே கட்டுப்படுத்திவிடுவதால், தொற்றாளர்களை மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய அவசியத்தைக் குறைப்பதிலும், அவர்களின் உயிரைக் காப்பதிலும் பெரும் பங்கு வகிக்கும் என்று வல்லுநர்கள் எதிர்பார்க்கின்றனர். இதன் மூன்று கட்ட ஆய்வுகளின்போது, மிதமான மற்றும் நடுத்தர பாதிப்பு ஏற்பட்ட கொரோனா தொற்றாளர்களுக்கு இந்த மாத்திரை வழங்கப்பட்டது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், உடற்பருமன், இதயநோய், நீரிழிவு போன்ற துணை நோய்களில் ஏதாவது ஒன்று காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களிடமும் ஆய்வு செய்யப்பட்டதில், இந்த மாத்திரை தொற்றாளர்களின் இறப்பு விகிதத்தை 50% குறைத்திருக்கிறது. 29 நாட்கள் அவர்களைத் தொடர்ந்து கவனித்த அளவில் இந்த மாத்திரை வழங்கப்பட்டவர்களில் யாரும் மரணமடையவில்லை எனவும், பொய் மாத்திரை (Placebo) வழங்கப்பட்டவர்களில் 8 பேர் மரணமடைந்துள்ளனர் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன.



இந்த வகையில் மோல்னுபிரவிர் மாத்திரையின் பாதுகாப்புத் தன்மையும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேலும், கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத தொற்றாளர்களிடம் இது ஆய்வு செய்யப்பட்டதால், இதன் நம்பகத் தன்மையும் உறுதியாகியுள்ளது. இது கர்ப்பிணிகளிடம் ஆய்வு செய்யப்படவில்லை என்பது மட்டுமே குறை.

**எப்படி வேலை செய்கிறது?**

வழக்கத்தில், தொற்றாளரின் செல்களில் கொரோனா வைரஸ் வேகவேகமாக நகலெடுத்துப் பெருகி வளரும் குணமுடையது. மோல்னுபிரவிர் மாத்திரை கொரோனா வைரஸின் மரபணு வரிசையில் நகலெடுக்க உதவுகிற முக்கியமான நொதிகளை மாற்றியமைத்துப் பல்வேறு பிழைகளை உண்டாக்கிவிடுவதால், எப்போதும் போல் நகலெடுப்பதில் கொரோனா வைரஸுக்குத் தடுமாற்றம் ஏற்படுகிறது. இதன் நகலெடுப்பு வேகம் குறைந்துவிடுகிறது. உடலில் வைரஸ் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படுகிறது. இப்படி, கொரோனா தொற்று ஆரம்பத்திலேயே அடங்கிவிடுகிறது.

கொரோனா வைரஸிடம் இதுவரை காணப்பட்ட காமா, டெல்டா, டெல்டா பிளஸ், மியூ என எல்லா வகை வேற்றுருவங்களின் தொற்றையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் மோல்னுபிரவிர் மாத்திரைக்கு உள்ளது என்பது கூடுதல் நன்மை. உலக அளவில் 53 லட்சம் பேரை பலிவாங்கியிருக்கும் கொரோனா தொற்றை முடிவுக்குக் கொண்டுவர இது ஓர் அருமருந்தாக அமையும் என்று வல்லுநர்கள் எதிர்பார்க்கின்றனர்.

18 வயதுக்கு மேற்பட்ட, ஏதேனும் ஒரு துணைநோயுள்ள கொரோனா தொற்றாளருக்கு அறிகுறிகள் தொடங்கிய 5 நாட்களுக்குள் தொற்றை உறுதி செய்து, இந்த மாத்திரையைக் கொடுத்துவிட வேண்டும். ஒரு வேளைக்கு 800 மி.கி. வீதம் தினமும் இரண்டு வேளைகளுக்கு மொத்தம் 5 நாட்களுக்கு இதை எடுத்துக்கொள்ள வேண்டும். மருத்துவரின் மேற்பார்வையில், வீட்டில் இருந்துகொண்டே இந்தச் சிகிச்சையை மேற்கொள்ளலாம் என்பது மற்றொரு நன்மை.

**பைசர் மாத்திரை**

மெர்க் நிறுவனத்தைப்போலவே பைசர் நிறுவனமும் ‘PF-07321332/ Ritonavir’ எனும் கொரோனா மாத்திரையைத் தயாரித்துள்ளது. அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து ஒழுங்காற்றுக் கழகத்தின் (FDA) அனுமதிக்காக இந்த நிறுவனம் காத்திருக்கிறது. ‘பேக்ஸ்லோவிட்’ (Paxlovid) எனும் வணிகப் பெயரில் இது சந்தைக்கு வர இருக்கிறது் கரோனா தொற்றை ஆரம்பநிலையிலேயே தடுத்து, தொற்றாளருக்கு இறப்பு ஏற்படுவதை 89% தவிர்த்துவிடும் ஆற்றல் கொண்டது. இதைக் கர்ப்பவதிகளுக்கும் வழங்கலாம் என்பது கூடுதல் நன்மை.

இதுவும் கொரோனா தொற்றின் அறிகுறிகள் தொடங்கிய 5 நாட்களுக்குள் எடுக்கப்பட வேண்டிய மாத்திரைதான். ஒரு வேளைக்கு 2 மாத்திரைகள் வீதம் தினமும் இரண்டு வேளைகளுக்கு மொத்தம் 5 நாட்களுக்கு எடுக்கப்பட வேண்டும். இது, கொரோனா வைரஸ் நகலெடுக்கத் தேவையான ‘புரோட்டியேஸ்’ நொதியின் உற்பத்தியைத் தடுத்துவிடுவதால், தொற்றாளரிடம் இதன் எண்ணிக்கை கட்டுப்படுகிறது. தொற்று தீவிரமாவது மட்டுப்படுகிறது.




பக்கவிளைவுகள் அதிகம் இல்லாத இந்த இரண்டு வகை மாத்திரைகள் வழங்கப்படுவது நடைமுறைக்கு வரும்போது, தொற்றாளர்களுக்குச் சளிப் பரிசோதனைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதும், பரிசோதனைகளை அதிகப்படுத்த வேண்டியதும், அறிகுறிகளை அலட்சியம் செய்யாமல் உடனே சிகிச்சை பெறவேண்டியதும் முக்கியமாகின்றன. அதற்கு அரசுகளும் சமூகமும் தயாராக வேண்டும் என்கின்றனர் வல்லுநர்கள். இது எல்லா நாடுகளுக்கும் பொருந்தும்.

அடுத்ததாக, தடுப்பூசிகள் செலுத்திக் கொண்டவர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால், பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த கொரோனா மாத்திரைகளின் பயன்பாடு அவசரமாகத் தேவைப்படுகிறது எனவும், தடுப்பூசிகள் மிகக் குறைவான அளவில் செலுத்தப்பட்டுள்ள ஏழை மற்றும் நடுத்தர நாடுகளில் கொரோனா தொற்றாளர்களுக்கு இந்த மாத்திரைகளைப் பயன்படுத்தித் தொற்றைக் கட்டுப்படுத்தலாம் எனவும் வல்லுநர்கள் யோசனை கூறியுள்ளனர். ஆக மொத்தத்தில், தடுப்பூசியுடன் இந்த மாத்திரைகளும் பயனுக்கு வந்து விட்டால், அடுத்தடுத்த கொரோனா அலைகள் எத்தனை வந்தாலும், உயிராபத்து இல்லாமல் அவற்றை எதிர்கொள்ள முடியும் எனும் நம்பிக்கை பிறந்துள்ளது. ■

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - II நேரம் : 1 மணித்தியாலம்

**28.** 150g பருப்பின் விலை ரூபாய் 36.00 ஆகும். எனின் 1kg பருப்பு வாங்குவதற்குத் தேவையான பணம் யாது?

..........................................................................

**29.** தரம் 5 வகுப்பில் உள்ள மாணவர்கள் விரும்பும் நிறங்கள் தொடர்பான விபரம் வரைபில் தரப்பட்டுள்ளது.







**(i)** பச்சை நிறத்தை விரும்புவோரின் எண்ணிக்கை சிவப்பு நிறத்தை விரும்புவோரின் எண்ணிக்கையின் அரைவாசியாகும். அதனை நிழற்றிக் காட்டுக.

**(ii)** தரம் ஐந்து வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................

- **30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** சூரிய நமஸ்காரப் படிமுறையில் 3ஆம், 4ஆம், 5ஆம் படிமுறையாக அமைவது

(1)  (2)  (3) 

**31.** நான் சுவாசிக்கும் ஒலியையும் நன்றாகச் செவிமடுக்கின்றேன். எனக்கு இப்போது எனது இதயத்தின் ஒலி மட்டுமே கேட்கிறது. ஆம் எனது உள்ளம் அமைதியடைந்துள்ளது. எனது உடலும் உள்ளமும் அமைதியடைந்துள்ளன. இக் கூற்று

(1) உள்ளத்தைத் தளர்த்துதல் (2) பிரார்த்தனை (3) உடலைத் தளர்த்துதல்

**32.** ஆணிவேர் காணப்படும் தாவரத் தொகுதி எது?

(1) பனை, தென்னை, கமுகு, நெல்
(2) பலா, வேம்பு, கொய்யா, முதிரை
(3) இலுப்பை, கமுகு, கித்துள், கடைச்சி

**33.** இலுப்பை, கொன்றை ஆகியவை பூக்கும் மாதம்

(1) பங்குனி மாதம் (2) ஆவணி மாதம் (3) கார்த்திகை மாதம்

**34.** பின்வரும் பண்புகளைக் கொண்ட வித்து பரவலடையும் முறை யாது?

- கொழுக்கி போன்ற அமைப்பைக் கொண்டிருக்கும்.
- ஒட்டும் தன்மை காணப்படும்.
- சுவையான சதைப்பகுதியைக் கொண்டிருக்கும்.

(1) நீரினால் பரவலடைகின்றது.
(2) காற்றினால் பரவலடைகின்றது.
(3) விலங்கினால் பரவலடைகின்றது.

**35.** வறள்நிலப் பிரதேசங்களில் வளரும் தாவரங்களைக் கொண்ட தொகுதி

(1) வாழை, கமுகு, கங்கூன்
(2) பிரண்டை, கள்ளி, கற்றாளை
(3) தென்னை, இலந்தை, கொகில

**36.** செயற்பாடு ஒன்றிற்காக தரம் 5 மாணவர்கள் திறந்த வெளியில் காணப்பட்ட புல்லினை தகரம் ஒன்றினால் மூடி சில நாட்களின் பின் திறந்து பார்த்தனர். அப்போது அவர்களால் அவதானிக்க முடிந்தது யாது?

(1) புற்கள் பச்சை நிறமாகக் காணப்பட்டன.
(2) புற்கள் கரும் பச்சை நிறமாகக் காணப்பட்டன.
(3) புற்கள் மஞ்சள் நிறமாகக் காணப்பட்டன.

**37.** பின்வருவனவற்றுள் ஈருடக வாழி எது?

(1) ஆமை (2) முதலை (3) தவளை

**38.** இலங்கைக்கே உரித்தான முலையூட்டி அல்லாதது?

(1) சுண்டெலி (2) கலவத்தன் (3) வரிக்குதிரை

**39.** வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தின் ஒழுங்குமுறை

(1) குடம்பி - முட்டை - கூட்டுப்புழு - நிறையுடலி
(2) முட்டை - குடம்பி - கூட்டுப்புழு - நிறையுடலி
(3) குடம்பி - கூட்டுப்புழு - முட்டை - நிறையுடலி

**40.** "சகல சௌபாக்கியங்களையும் கொண்ட தன்னிறைவான, இந்நாட்டில் சூரியனும் சந்திரனும் நிலைத்திருக்கும் காலமெல்லாம் தார்மீகத்தைக் காத்தவாறு நாட்டுமக்கள் யாவரும் இருப்பார்களாக." இதை உணர்த்துவது இலங்கையின்

(1) தேசிய விளையாட்டு (2) தேசியக் கொடி (3) தேசிய இலச்சினை

**41.** சப்பிரகமுவா, வடமத்திய ஆகிய இரு மாகாணங்களிலும் உள்ளடங்குகின்ற மாவட்டங்கள் முறையே

(1) மொனராகலை, குருநாகல் (2) கேகாலை, அநுராதபுரம் (3) இரத்தினபுரி, மாத்தளை

**42.** எமது நாட்டில் பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் ஆகியோர் கொண்டாடும் பண்டிகைகள் முறையே

(1) ஈஸ்ட்டர், ஹஜ்பெருநாள், புதுவருடப்பிறப்பு, பொசன்
(2) புதுவருடப்பிறப்பு, தைப்பொங்கல், நவராத்திரி, வெசாக்
(3) வெசாக், தீபாவளி, றம்ழான், பெரியவெள்ளி

**43.** குளத்தையும், கட்டுவித்த மன்னனையும் சரியாகக் கொண்டது

(1) மின்னேரியா - 2ம் அக்போ
(2) கலாவாவி - தாதுசேனன்
(3) சேனநாயக்க சமுத்திரம் - பண்டுகாபயன்

**44.** இலங்கையில் காணப்படும் வணக்கத்துக்குரியது அல்லாத வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடம்

(1) தலதாமாளிகை (2) திருக்கோணேச்சரம் (3) யாழ்ப்பாணக்கோட்டை

# பலத்த பாதுகாப்புடன் 'பட்ஜெட்' கூட்டத்தொடர் 12இல் ஆரம்பம்



கொழும்பு, நவ. 10

அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் எதிர்வரும் 12 ஆம் திகதி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரவு - செலவுத்திட்டம் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்படவுள்ளது. டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூட இருப்பதோடு சனிக்கிழமைகளிலும் பாராளுமன்றம் கூடவுள்ளது. ஞாயிறு மற்றும் அரச விடுமுறை நாட்கள் தவிர, அனைத்து நாட்களிலும் விவாதம் நடைபெறும்.

செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்காக இம்முறை வரவு - செலவுத்திட்ட விவாதங்கள் சைகை மொழியிலும் இடம்பெறவுள்ளமை விசேட அம்சமாகும்.

இந்தநிலையில், எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் தினத்தில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட இருப்பதோடு ஏனைய நாட்களிலும் விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் மற்றும் கொரோனா நிலைமை காரணமாக 2019 மற்றும் 2020 வரவு - செலவுத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. இரண்டு வருடங்களின் பின்னரே இம்முறை வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுகின்றது. (இ)

# உரத்தால் சீனாவுடனான உறவில் பாதிப்பில்லை!

## வெளிவிவகார அமைச்சர் விளக்கம்



**கொழும்பு, நவ. 10**

**“சேதனப் பசளை விவகாரத்தால் சீனா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையில் எவ்வித பிரச்னையும் இல்லை. இது இரு தரப்பினருக்கிடையிலான வர்த்தக நடவடிக்கையே. மாறாக இராஜதந்திர நகர்வு அல்ல.”**

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அறிவித்தார்.

சிறீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைய கத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”உரப்பிரச்னையானது இராஜதந்திரப் பிரச்னை அல்ல. அதேபோல இரு அரசுகள் மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான பிரச்னையும் கிடையாது.

வர்த்தக - கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்டுள்ள பிரச்னையாகும் வழக்குத்தொடுப்பதற்கு சீன நிறுவனத்துக்கு அதிகாரம் உள்ளது.

இவ்விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளதால் அது பற்றி ஆழமாகக் கருத்துரைக்க முடியாது. இது சீன அரசு போட்ட வழக்கும் கிடையாது” - என்றார்.(இ)



### கொள்ளையில் ஈடுபட்ட 6 பேர் கைது

கொழும்பு, நவ. 10

கொழும்பு, கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்மலானை பிரதேசத்திலுள்ள வீடொன்றில், இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஆறுபேரை, கல்கிஸைப் பிரிவுக்கான குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இரத்மலானை, கல்கிஸை, மொரட்டுவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 26, 30, 21, 32, 35 மற்றும் 40 வயதுகளையுடைய அறுவரே இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 12 கிராம் ஹெரோய்ன், இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கைக்குண்டு என்பவற்றையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த வீட்டுக்குள், அத்துமீறி நுழைந்த குழுவினர், வீட்டிலிருந்தவர்களைத் தாக்கிவிட்டு வீட்டின் உடைமைகளுக்குச் சேதம் விளைவித்துவிட்டு இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் கல்கிஸை பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்தே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

# அறிவுறுத்தலை உதாசீனம் செய்தால் கடும் நடவடிக்கை

## அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 10

அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்து மற்றவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் செயல்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதத்த ரணசிங்க தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையைக் கருத்தில் கொண்டு எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினர், ஆயுதப் படையினர் மற்றும் பொலிஸார் தயாராக இருக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அனர்த்தம் தொடர்பில் மக்களுக்கு அறிவிக்கப்பட்டவுடன் குறித்த இடத்திலிருந்து வெளியேறுமாறும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ள அவர், ஏறக்குறைய தேவையான அனைத்து முன் ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

காடுகளுக்குள் பயணித்தல், மலையேறுதல், ஆற்றில் குதித்தல், படகு சவாரி போன்ற பொழுதுபோக்கு நிகழ்வுகளைத் தவிர்க்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

இந்தச் செயல்பாடுகள் உதவிக்கு வருபவர்களின் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய அனர்த்த நிலைமை மற்றும் கொரோனாத் தொற்றுநோய் நிலைமையைக் கருத்தில்கொண்டு தேவையற்ற பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இதனிடையே நாட்டில் அனர்த்த சூழ்நிலை காரணமாக நிவாரண நிலையங்களில் பலர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (இ)



### சில்லறை கடையில் தீ வயோதிபர் உயிரிழப்பு!

அநுராதபுரம், நவ. 10

சில்லறைக் கடையொன்றில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக எரிகாயங்களுக்குள்ளான நிலையில் வயோதிபர் ஒருவர் மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் அநுராதபுரம், மின்னேரியா பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

மின்னேரியா பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

தீக்காயங்களுக்குள்ளான நபர் உடனடியாக மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

பிரேத பரிசோதனைக்காக பொலனறுவை வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மின்னேரியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# கதிர்காமம் கோயிலில் ரூ. 5 கோடி பெறுமதியான மாணிக்கக்கல்லும் மாயம்

கதிர்காமம், நவ. 10

கதிர்காமம் கோயிலுக்கு வழங்கப்பட்டிருந்த சுமார் 5 கோடி ரூபாய் பெறுமதியான மாணிக்கக்கல்லும் மாயமாகியுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த மாணிக்கக்கல் வர்த்தகத்தில் ஈடுபடும் வியாபாரி ஒருவராலேயே குறித்த மாணிக்கக்கல், கோயிலுக்குப் பூஜை செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என சிங்கள இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை, கதிர்காமம் கோயிலுக்கு பாதாளக் குழு உறுப்பினர் அங்கொட லொக்கா தரப்பால் வழங்கப்பட்டிருந்த 38 பவுண் தங்கத் தகடொன்றும் அண்மையில் காணாமல்போயிருந்தது. அதன்பின்னர் இடம்பெற்ற பொலிஸ் விசாரணைகளையடுத்து அது மீட்கப்பட்டிருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ)

ஈழநாடு





## தென்சூடானில் வெள்ளத்தால் 12 இலட்சம் மக்கள் பாதிப்பு!

ஜூபா, நவ. 10
தென்சூடானில் 12 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சீனி, பருப்பு, அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களை விரைவாக வழங்கப்படும். இதற்காக எகிப்து 12 தொன் உணவுப் பொருட்களை தெற்குசூடானுக்கு அனுப்பியுள்ளது.

கடந்த வாரம் மட்டும் 7 இலட்சத்து 60 ஆயிரம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர் என்று ஐ. நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

# புலம்பெயர்வோரை எல்லையில் தடுத்து நிறுத்தியது போலந்து!

- ஆயிரக்கணக்கானோர் காட்டில் தஞ்சம்
- உணவு, நீரின்றி ஏராளமானோர் தவிப்பு
- குளிர் தாங்காமல் பலர் உயிரிழப்பு



வார்ஷோ, நவ. 10
பெலாரஸூடனான கிழக்கு எல்லை ஊடாக நாட்டுக்குள் நுழைய முயன்ற நூற்றுக்கணக்கான புலம்பெயர்ந்தவர்களை வழிமறித்துத் தடுத்து நிறுத்தியுள்ளதாக போலந்து தெரிவித்துள்ளது.

மேலும், ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்தோர் போலந்துக்குள் நுழையும் முயற்சியில் வழியில் உள்ளனர் என்று போலந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான புலம்பெயர் மக்கள் முட்கம்பி எல்லை வேலிக்கு அருகில் இருப்பதை வெளியாகியுள்ள காணொலி காட்சிகளில் காண முடிகிறது. அவர்களில் சிலர் தடையை மீறி எல்லை ஊடாக நுழைய முயன்ற போது அவர்களை பாதுகாப்பு படையினர் தடுத்து நிறுத்தினர்.

போலந்து அரசாங்கம் திங்களன்று புலம்பெயர்ந்தோர் நெருக்கடி தொடர்பில் ஆராயும் கூட்டத்தை நடத்தியது.

அத்துடன், புலம்பெயர்வோரை தடுத்து நிறுத்த எல்லை பிராந்தியத்திற்கு 12 ஆயிரம் துருப்புக்களை அனுப்பியது.

புலம்பெயர்ந்தவர்களை தமது எல்லை நோக்கி பெலாரஸ் தொடர்ந்து அனுமதிப்பதாகவும் போலந்து குற்றம் சாட்டியது. இது விரோத நடவடிக்கை எனவும் போலந்து விமர்சித்துள்ளது. சமீபத்திய மாதங்களில் பெலாரஸில் இருந்து சட்ட விரோதமாக தங்கள் நாடுகளுக்குள் நுழைய முயற்சிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக போலந்து, லிதுவேனியா மற்றும் லாட்வியா ஆகிய நாடுகள் கூறுகின்றன.

இவ்வாறு நுழைய முயலும் பலர் மத்திய கிழக்கு மற்றும் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத் தடைகளுக்குப் பழிவாங்கும் வகையில் புலம்பெயர்ந்தோர் ஊடுருவலை பெலாரஸின் சர்வாதிகார ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ எளிதாக்கியுள்ளாரென ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை, புலம்பெயர்ந்தவர்களின் படையெடுப்பை அடுத்து எல்லைப் பகுதியான குஸ்னிகாவில் பெலாரஸூடனான தனது எல்லைக் கடவையை மூடுவதாக போலந்து எல்லைக் காவல்படை நேற்று அறிவித்தது.

இந்நிலையில் பெலாரஸில் இருந்து சட்டவிரோதமாக போலந்துக்குள் நுழைய முற்படும் ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்தவர்கள் உயிர் ஆபத்துக்களை எதிர்கொள்ளக் கூடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. எல்லைப் பகுதிகளில் கால நிலை மிக மோசமாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு போலந்து நோக்கி வரும் பலர் எல்லைகள் மூடப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதால் போலந்தின் காடுகளில் சிக்கித் தவிக்கின்றனர். பலர் கடும் குளிரால் உயிரிழந்தனர். சாப்பிட உணவின்றியும் குடிக்க நீர் இல்லாமலும் புலம்பெயர்ந்தவர்கள் பெருமளவானோர் எல்லையில் சிக்கித் தவித்து வருகின்றனர். இவர்களில் பலர் ஆட்கடத்தல் முகவர்களால் அழைத்துச் செல்லப்பட்டுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு கைவிடப்பட்டவர்கள் என்றும் தெரிய வருகிறது. (ஐ)

# கோவிட் கட்டுப்பாடுகளுக்கு எதிராக நியூசிலாந்தில் பெரும் ஆர்ப்பாட்டம்!




வெலிங்டன், நவ. 10
அரசாங்கத்தின் கட்டாய தடுப்பூசி ஆணை மற்றும் கோவிட் கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நியூசிலாந்தில் நேற்று செவ்வாய்க் கிழமை ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பாராளுமன்றத்தை நோக்கி சென்ற நிலையில் பாராளுமன்ற சூழலில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற கட்டடத்தின் இரண்டு நுழைவாயில்களைத் தவிர மற்ற அனைத்தும் மூடப்பட்டு எதிர்ப்பாளர்கள் நுழைய முடியாதவாறு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெரும்பாலும் முகக்கவசம் அணியாத போராட்டக்காரர்கள் மத்திய வெலிங்டன் வழியாக அணிவகுத்து பாராளுமன்றத்திற்கு வெளியே கூடினர். ஆர்ப்பாட்டத்தில் தடுப்பூசி கட்டாய ஆணைக்கு எதிராக கோஷம் எழுப்பப்பட்டது. அத்துடன், நாங்கள் ஆய்வக எலிகள் அல்ல என போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினர்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு ஆதரவு தெரிவித்தும், ஊடகங்கள் தொற்று நோய் மற்றும் தடுப்பூசிகள் தொடர்பில் பொய் தகவல்களை வெளியிடுவதாகவும் அவர்கள் கருத்து வெளியிட்டனர்.

வேகமகப் பரவக் கூடிய கொரோனா வைரஸ் டெல்டா திரிபைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த ஆண்டு நியூசிலாந்தில் சமூக முடக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. அத்துடன், கட்டாய தடுப்பூசி கொள்கைத் திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சுகாதார துறையினர், ஆசிரியர்கள் மற்றும் தொழிலாளர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு தடுப்பூசி கட்டாயம் என நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் கடந்த மாதம் கூறினார். இது தனி மனித சுதந்திரத்தை மீறும் செயல் என விமர்சனங்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வகுப்பறை தீ பற்றியதால் 25 மாணவர்கள் உயிரிழப்பு

நியாமி, நவ. 10
நைகர் நாட்டின் தெற்கு பகுதியில் வைக்கோலால் வேயப்பட்ட வகுப்பறைகள் தீப் பிடித்ததில் 25 குழந்தைகள் தீயில் கருகி உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்தவர்கள் அனைவரும் 5 முதல் 6 வயது வரையானவர்களாவர்.

திங்கட்கிழமை காலை பாடசாலை ஆரம்பமான சமயத்தில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் பலர் காயமடைந்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

நைகரில் பாடசாலைகள் பொதுவாக செங்கற்களால் அமைக்கப்படுகின்றன. ஆனால், இடப்பற்றாக்குறை காரணமாக வைக்கோல், மரப் பலகைகளை பயன்படுத்தியும் வகுப்பறைகள் கட்டப்படுகின்றன. இவ்வாறான வகுப்பறை தீப் பிடித்தது. இதில் 3 வகுப்பறைகள் அழிந்து விட்டன என்றும் தெரியவருகின்றது. (ஐ)



# விண்வெளியில் நடை பயணம்; முதல் சீன பெண்ணாக வாங்!

பீஜிங், நவ. 10
விண்வெளி நடைபயணம் மேற்கொண்ட முதல் சீன பெண் என்ற வரலாற்று சாதனையை படைத்துள்ளார் வாங் யாப்பிங்.

சீனா விண்வெளியில் தனக்கென புதிதாக ஒரு விண்வெளி நிலையத்தை கட்டமைத்து வருகிறது. 2022ஆம் ஆண்டுக்குள் இந்த விண்வெளி நிலையத்தை முழுமையாக கட்டமைத்து பயன்பாட்டுக்கு கொண்டுவர சீனா திட்டமிட்டுள்ளது.

'தியான்ஹே' என பெயரிடப்பட்டுள்ள விண்வெளி நிலையத்தை அமைக்கும் இறுதிக்கட்ட பணிகளை மேற்கொள்வதற்காக ஜாய் ஜிகாங், யே குவாங்பு ஆகிய இரு விண்வெளி வீரர்களுடன் வாங் யாப்பிங் என்கிற வீராங்கனையையும் சீனா கடந்த மாதம் விண்ணுக்கு அனுப்பியது.

இந்த நிலையில் 'தியான் ஹே' விண்வெளி நிலையத்தை செயல்பாட்டுக்கு கொண்டு வரும் பணியின் ஒரு பகுதியாக விண்வெளி வீரர் ஜோய் ஜிகாங்குடன் இணைந்து வீராங்கனை வாங் யாப்பிங் விண்வெளியில் நடை பயணம் மேற்கொண்டார்.

விண்வெளியில் நடப்பதற்கான பிரத்யேக ஆடைகளை அணிந்து கொண்டு விண்வெளி நிலையத்தில் இருந்து வெளியே வந்த இருவரும் சுமார் ஆறரை மணி நேரம் விண்வெளி நடைபயணத்தை மேற்கொண்டனர். இதன் மூலம் விண்வெளி நடைபயணம் மேற்கொண்ட முதல் சீன பெண் என்கிற வரலாற்று சாதனையை படைத்துள்ளார் வாங் யாப்பிங். (ஐ)



## கைக்குண்டுடன் ஒருவர் கைது!

கொழும்பு, நவ. 10

கொழும்பு முல்லேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லேரியா வடக்கு பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கைக்குண்டு ஒன்றுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முல்லேரியா, கோடெல்ல மாவத்தை பிரதேசத்தை சேர்ந்த 29 வயது நபரே இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# கடற்படையின் தொடர்ச்சியான கண்காணிப்பில் வடக்கு கடல்

## இந்திய மீனவர்கள் விரட்டியடிப்பு; கடற்றொழில் அமைச்சு தெரிவிப்பு



கொழும்பு, நவ. 10

**“தேச எல்லையைத் தாண்டி இலங்கைக்குள் உள்நுழையும் இந்திய மீனவர்களைக் கைதுசெய்யும் செயல்பாடுகள் மட்டுமல்ல அவர்களை விரட்டியடிக்கும் செயல்பாடுகளும் கடற்படையினரால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.**

வடக்கு கடல் எல்லையை அதிகளவில் பலப்படுத்தி வைத்துள்ளதுடன், தொடர்ச்சியான கண்காணிப்பு செயல்பாடுகளில் இலங்கை கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.”

- இவ்வாறு கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தேச எல்லையைத் தாண்டும் எவரையும் கைது செய்யும் செயற்பாடுகளை ஒரு போதும் நாம் நிறுத்தவில்லை. எனினும், கடந்தகால கொரோனா நிலைமைகளில் எல்லை தாண்டும் இந்திய மீனவர்களைக் கைதுசெய்து இலங்கையில் தடுத்து வைக்கும் செயற்பாடுகளில் சவால்கள் காணப்பட்டன.

குறிப்பாக டெல்டா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நிலைமைகளை அடுத்து அவர்களைக் கைதுசெய்து இலங்கையில் தடுத்து வைக்க வேண்டாம் என்று சுகாதாரத் தரப்பினர் இலங்கைக் கடற்படைக்கு ஆலோசனை வழங்கினர்.

இலங்கை கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக உள்நுழையும் மீனவர்களை விரட்டியடிக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. அதுமட்டுமல்ல, இலங்கை கடற்படையினர் அளவுக்கதிகமாக வடக்கு கடல் எல்லையைப் பலப்படுத்தி வைத்துள்ளதுடன், தொடர்ச்சியான கண்காணிப்பு செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேபோல் கடந்த ஆண்டில் இவ்வாறு கடல் எல்லையினூடாக சட்டவிரோதமாகப் போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்யும் செயற்பாடுகளை இலங்கை கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர்”

- என்றார். (இ)

# மண்வெட்டியால் தாக்கி குடும்பஸ்தர் படுகொலை

களுத்துறை, நவ. 10

குடும்பஸ்தர் ஒருவர் மண்வெட்டியால் தாக்கிக் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் களுத்துறை, அகலவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஹல குடலிகம - நேபொட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுபோதையில் ஏற்பட்ட தகராறில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபர் நேபொட பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடை யவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் அகலவத்தை பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 45 பேர் சிக்கினர்

கொழும்பு, நவ. 10

தனிமைப்படுத்தல் சட்ட விதி முறைகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 45 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் தலைமையகம் நேற்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக நாட்டில் இது வரை தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 952ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

# மேல் மாகாணத்தில் தொடரும் பொலிஸாரின் கடும் சோதனை

கொழும்பு, நவ. 10

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் விடுக்கப்பட்ட பொதுச் சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றதா என்பதைக் கண்டறிவதற்காக மேல் மாகாணத்தில் நேற்றுமுன்தினமும் இரண்டு மணித்தியாலங்கள் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேல் மாகாணத்தின் பல பிரதேசங்களில் 445 பொலிஸார் இணைந்து பிற்பகல் 2 மணியிலிருந்து மாலை 4 மணிவரை சோதனை நடவடிக் கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது 868 பஸ்கள், 150 அதிசொகுசு பஸ்கள், 1,159 அதிசொகுசு பஸ்கள் என்பன சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்த நடவடிக்கைகளின் போது சுகாதார விதிமுறைகளை மீறிச் செயல்பட்ட 309 பஸ்கள், 38 அதிசொகுசு பஸ்கள், 455 வர்த்தக நிலையங்களுக்குப் பொலிஸார் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (இ)

# விபத்தில் பெண்ணொருவர் உட்பட 2 பேர் பரிதாப மரணம்

## இருவருக்கு காயம்

கம்பஹா, நவ. 10

கம்பஹா, நிட்டம்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஸ்யால மீரிகம வீதியில், கனரக வாகனமொன்று மற்றுமொரு வாகனத்துக்கு இடம்கொடுக்க முற்பட்ட போது வானொன்றுடன் நேருக்கு நேர் மோதியுள்ளது டன் வான் மோட்டார் சைக்கிளொன்றுடன் மோதி வடிகானில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த வானின் சாரதி உட்பட நால்வர் வத்துப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது வானின் சாரதியும் பெண்ணொருவரும் மரணமடைந்தனர்.

இவ்விபத்தில் மெட்டியகனே, நாரம்மல பிரதேசத்தை சேர்ந்த 47 வயதுடைய சாரதியும், கஹவத்த, கெலின் வீதியைச் சேர்ந்த 58 வயதுடைய பெண்ணொருவருமே உயிரிழந்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்துடன் தொடர்புடைய கனரக வாகனத்தின் சாரதியைக் கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# பதுளையிலிருந்து கண்டி நோக்கி பயணித்த ரயில் தடம்புரண்டது!

பதுளை, நவ. 10

பதுளையிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த ரயில், ஹாலி எல மற்றும் உடுவர ரயில் நிலையத்துக்கு அருகில், 177ஆம் கிலோமீற்றர் பகுதியில் வைத்து தடம் புரண்டுள்ளது.

நேற்றுக் காலை 6.10 மணியளவில் ரயில் தடம் புரண்டுள்ளது என்று ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது. தண்டவாளம் வழுக்கல் தன்மையுடன் காணப்பட்டதால் ரயில் தடம்புரண்டது என்று ரயில் செலுத்துநர் சிறில் விக்கிரம லியனகே தெரிவித்துள்ளார். (இ)



# காலி மாவட்டத்தில் 22 மாணவர்களுக்கும் 5 ஆசிரியர்களுக்கும் கொரோனா தொற்று

காலி, நவ. 10

காலி மாவட்டத்தில் 22 மாணவர்களுக்கும் 5 ஆசிரியர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

காலி மாவட்ட பிராந்திய தொற்றுநோய் நிபுணர் மருத்துவர் எரங்க ஹெட்டியாரச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் திறக்கப்பட்ட நாள் முதல் இதுவரையான காலப் பகுதியிலேயே 22 மாணவர்களும், 5 ஆசிரியர்களும் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எல்பிட்டிய, இந்துருவ, காலி ஆகிய பொதுச் சுகாதாரப் பிரிவுகளிலேயே தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

பெந்தொட்ட தேசிய பாடசாலையில் 17 மாணவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் மருத்துவர் எரங்க ஹெட்டியாரச்சி மேலும் கூறியுள்ளார். (இ)

# பஸிலின் பட்ஜெட்டை நம்பவே முடியாது!



## சரத் பொன்சேகா எம்.பி. கருத்து

கொழும்பு,நவ.10

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் முன்வைக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டம் மீது நம்பிக்கை வைக்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"எண்ணிக்கைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டே வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படும். சில மக்கள் நலத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டாலும் அவை அமுலுக்கு வராது.

எனவே, பாராளுமன்றத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முன்வைக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டம் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. மக்களிடமிருந்து எதையாவது பறிப்பதையே ஆட்சியாளர்கள் விரும்புகின்றனர்" - என்றார்.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இன்னும் நீதி நிலைநாட்டப்படவில்லை எனவும், முறையான விசாரணைகளும் இடம்பெறவில்லை என்ற நிலைப்பாட்டிலேயே நாட்டு மக்களும் உள்ளனர் எனவும் சரத் பொன்சேகா எம்.பி. சுட்டிக்காட்டினார். (இ)

## காரைநகர் பிரதேச சபைக்கான புதிய தவிசாளர் தெரிவு இன்று

யாழ்ப்பாணம், நவ. 10

காரைநகர் பிரதேச சபைக்கு புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

காரைநகர் பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் இடம்பெறும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை (ரெலோ கட்சியை ) பிரதிநிதித்துவப்படுத்தி 2018 ஆம் ஆண்டு முதல் தவிசாளராக இருந்த விஜயதர்மா கேதீஷ்வரதாஸ் கடந்த மாதம் 21ஆம் திகதி கொரோனாத் தொற்று காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமானார்.

இதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே புதிய தவிசாளரைத் தேர்வு செய்வதற்கான இன்றைய கூட்டத்தில் சுயேச்சை கட்சி சார்பாக 3 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி. சார்பாக 2 உறுப்பினர்களும், ஐ.தே.கட்சி சார்பாக 2 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக ஓர் உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சார்பாக 3 உறுப்பினர்களுமாக மொத்தம் 11 பேர் இடையே தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான முக்கிய கூட்டம் இடம்பெறவுள்ளது. (இ - 05)

## சடலம் மீட்கப்பட்ட விவகாரம்: பிரதான சந்தேகநபர் கைது!

கொழும்பு, நவ. 10

சப்புகஸ்கந்தைப் பிரதேசத்தில் அண்மையில் பயணப்பையொன்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வெல்லம்பிட்டியவில் உள்ள வீடொன்றில் தலைமறைவாகியிருந்த நிலையில் குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம், தொடர்பில் ஏற்கனவே, மட்டக்குளி - சமித்திபுர பகுதியைச் சேர்ந்த தம்பதியினர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், பெண்ணின் சடலத்தை கொண்டு சென்றதாகக் கருதப்படும் பாரவூர்தியொன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கு அருகில் கடந்த 4 ஆம் திகதி பயணப்பையில் வீசப்பட்ட நிலையில் பெண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

மாளிகாவத்தை தொடர் மாடி குடியிருப்பில் வசிக்கும் 44 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயான மொஹமட் ஷாபி பாத்திமா மும்தாஸ் என்று அடையாளம் காணப்பட்ட குறித்த பெண், ஒக்ரோபர் 28ஆம் திகதி பிற்பகல் தனது வீட்டிலிருந்து மற்றுமொரு பெண் மற்றும் ஆண் ஒருவருடன் ஓட்டோவில் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேற்கொண்ட விசாரணையில், கொலையுண்ட பெண் சூதாட்டத்தில் ஈடுபடுவதுடன் வட்டிக்குப் பணம் கொடுப்பவர் என்பதும் தெரியவந்தது. (இ)




## அதிபர் - ஆசிரியர்கள் நேற்று ஹற்றனில் பெரும் போராட்டம்

### சம்பள முரண்பாட்டுக்கு உரிய தீர்வு கோரி கோஷம்

ஹற்றன், நவ. 10

தேசிய எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு அதிபர் - ஆசிரியர் ஒன்றிணைந்த சங்கத்தால் நேற்று நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில், அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு உரிய தீர்வைப் பெற்று தருமாறு கோரி மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஹற்றனில் இடம்பெற்றது.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் ஹற்றன் மல்லியப்பு சந்தியில் ஆரம்பமாகிய ஆர்ப்பாட்டப் பேரணியையடுத்துப் பொலிஸார் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுட்டனர்.

மல்லியப்பு சந்தியிலிருந்து ஆரம்பமாகிய பேரணி பிரதான வீதியூடாக ஹற்றன் மணிக்கூண்டு வழியாக பிரதான பஸ் தரிப்பிடம் வரை வந்தது. அங்கு அதிபர் - ஆசிரியர்களின் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஹற்றன் கல்வி வலயத் துக்குட்பட்ட அதிபர் - ஆசிரியர்கள் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் நீண்டகாலக் கோரிக்கையான அதிபர் - ஆசிரியர்களின் கொடுப்பனவை வழங்கக் கோரியும், கல்வித் துறையிலுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தரக் கோரியும் கோஷம் எழுப்பப்பட்டது. (இ)







## இலங்கை - மாலைதீவு ஜனாதிபதிகள் பேச்சு

கொழும்பு, நவ. 10

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் சாலிஹ் ஆகியோருக்கு இடையே சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இருவரும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சாலிஹ் இரு நாள் விஜயம் மேற்கொண்டு, இலங்கைக்கு வந்துள்ளார்.

மாலைதீவின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் அஹமட் கலீல், மாலைதீவு ஜனாதிபதி அலுவலகத்தின் வெளிவிவகார செயலாளர் இப்ராஹிம் ஹூட், இலங்கைக்கான மாலைதீவு தூதுவர் உமர் அப்துல் ரசாக் மற்றும் இலங்கை ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (இ)

## பஸ் விபத்தில் 10 பேர் காயம்

தம்புள்ளை, நவ. 10

தம்புள்ளை - குருநாகல் வீதியின் தலகிரியாகம பிரதேசத்தில் நேற்றுப் பகல் இடம்பெற்ற பஸ் விபத்தில் 10 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கந்துருவலயிலிருந்து குருநாகல் வரை சேவையில் ஈடுபட்ட, தனியார் பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

மழையால் வீதியில் ஏற்பட்ட வழுக்கும் தன்மையுடன் பஸ்ஸின் ரயர்கள் தேய்ந்திருந்திருந்தமையால், பஸ் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பயணிப்பதற்குத் தகுதியற்ற முறையில் குறித்த ரயர்கள் காணப்பட்டன எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (இ)

## தொடரும் கடும்...

இதேசமயம், மூன்று மாவட்டங்களினதும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று புதன்கிழமை விடுமுறை வழங்கப்படுவதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் அறிவித்துள்ளார்.

வங்கக்கடலின் தென்கிழக்கு திசையில் மையம் கொண்டு மேற்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து வரும் தாழமுக்கம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தமிழ்நாட்டு கரையை கடக்கவுள்ளது. இதனால், வெள்ளிக்கிழமை வரை 150 மில்லிமீற்றருக்கு அதிகமான மழையும் கடும் காற்றும் வீசும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இதனால், இந்தப் பாதிப்புக்கள் மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகின்றது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் பெய்த கடும் மழையால் 7 ஆயிரத்து 584 குடும்பங்களை சேர்ந்த 25 ஆயிரத்து 508 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 139 குடும்பங்களை சேர்ந்த 463 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் 8 இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடரும் சீரற்ற காலநிலையால் 75 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இந்தத் தகவல்கள் அனைத்தும் யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை,உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய், சாவகச்சேரி,கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் பிரதேச செயலகங்களின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை.

**மன்னார்**

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழையால் 3 ஆயிரத்து 501 குடும்பங்களை சேர்ந்த 12 ஆயிரத்து 350 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

196 குடும்பங்களை சேர்ந்த 772 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் 4 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடரும் மழையால் 27 குடும்பங்களை சேர்ந்த 57 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். கனகாம்பிகை, வன்னேரி குளங்கள் வான்பாய்ந்து வருகின்றன மேலும் பல குளங்கள் வான்பாயத் தயாராக உள்ளன. இதனால், குளங்களுக்கு அண்மையாக, மற்றும் தாழ்நிலப் பகுதிகளில் வாழும் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-02-03)

## தாக்குதலுக்கு...

சஹ்ரானின் மனைவி வாக்குமூலமளித்துள்ளதாக தெரியவந்துள்ளது. எனவே அந்த வாக்குமூலம் தொடர்பான தகவல்களை வெளியிடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அரச கணக்குகள் பற்றிய அறிக்கைகள் மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் வலியுறுத்திய அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் அரசியல் ரீதியில் எனது கருத்துக்களை கூறுகின்றேன். ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்தால் நான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவதற்கு தயாராக இருக்கின்றேன்.

இதேவேளை இந்த பாராளுமன்றத்தில் சிறிய பிரச்சினையொன்றை கூற விரும்புகின்றேன். ஏப்ரல் மாதத்தில் நாங்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பல்வேறு தகவல்களை வெளியிட்டோம். அது தொடர்பில் கலந்துரையாட வருமாறு நாங்கள் அமைச்சர் சரத் வீரசேகரவிடம் கேட்டோம். இந்தத் தகவல்கள் விசாரணை அறிக்கைகளில் வராதவையே.

இன்னுமொரு விடயத்தை கூறுகின்றோம். 2019 ஏப்ரல் 4 ஆம் திகதி இரண்டு லொறிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவை சாட்சிகளாகும். இதன்போது அதில் என்ன இருந்தன ? அந்த லொறியை விடுவித்த உயர் பொலிஸ் அதிகாரி யார்? அந்த லொறியின் உரிமையாளர் யார்? என்பதனையாவது கூறுமாறு நாங்கள் அமைச்சர் சரத் வீரசேகரவிடம் கேட்கின்றோம்.

அதுமட்டுமன்றி ஏப்ரல் 21 ஆம் திகதி குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெறும் போது நான் குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரி, பாசிக்குடாவில் உள்ள மாலு ஹோட்டலில் இருந்தார். யார் அவருக்கு அங்கு தங்குவதற்கு கட்டணத்தை செலுத்தியது என்பதனை அறிய வேண்டும். இவை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சாட்சியங்களில் வெளிவராத தகவல்களே.

சஹ்ரானின் மனைவி உயிருடன் இருக்கின்றரா? என்று தெரியவில்லை. ஆனால் சஹ்ரானின் மனைவி வெளியிட்ட வாக்குமூலத்தை பாராளுமன்றத்தில் வெளியிடுங்கள். நாட்டின் புலனாய்வு பிரிவு அதிகாரியொருவர் சஹ்ரானை வீட்டில் சந்தித்ததாக சஹ்ரானின் மனைவி கூறியுள்ளார்.

நான் பொய் கூறவில்லை. அவ்வாறு பொய்கூறுகின்றேன் என்றால் சி.ஐ.டி.யை அழைத்து ஜனாதிபதி ஆணைக்குழுவில் இவ்வாறு கூறவில்லை என்று கூறுமாறு நான் சரத் வீரசேகரவை கேட்கின்றேன். எங்கள் மீது எவ்வளவு சேறு பூசினாலும் சாபத்தில் இருந்து தப்பிக்க முடியாது என்பது கண் முன்னே தெரிகின்றது என்றார்.

## கனடாவுக்கு...

கில் சந்தேகத்துக்கிடமான வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றை கடற்படையினர் சோதனையிட்டபோதே குறித்த குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இவர்கள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வத்தளை, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலநறுவை, நீர்கொழும்பு மற்றும் கொச்சிக்கடை ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் என தெரியவந்துள்ளது.

கடற்படையினர் தமக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து நேற்றுக் காலை இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டனர்.

கைதானவர்களில் 16 பேர் ஆண்கள், ஒருவர் பெண், நான்கு சிறுவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக கடற்படையினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஏ-9 வீதி...

கிள் மோதியதில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவரும் அவருடன் பயணித்தவருமே இவ்வாறு உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 11.40 மணியளவில் கிளிநொச்சி - பரந்தன் ஏ-9 வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில், பரந்தன் - குமரபுரத்தை சேர்ந்த மகேந்திரராசா யூட்கபிசன் (வயது -29), சௌந்தானந்தன் காந்தீபன் (வயது 34) என்போரே இவ்வாறு உயிரிழந்தனர்.

இவர்களில் ஒருவருக்கு நேற்று பிறந்த நாளாகும். பிறந்தநாளை கொண்டாடுவதற்காக விருந்து ஏற்பாட்டுக்காக சென்று திரும்பியபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து குறித்து கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்து நடத்தி வருகின்றனர். (ஐ)

## மீண்டும்...

உயிரிழந்தனர் என்பதுடன், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 13,892 ஆக அதிகரித்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 14 பேரும் 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்களில் 02 பேரும் 30 வயதுக்குக் கீழ் ஒருவரும் மரணித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதை 60 ஆக நிர்ணயிக்கும் சட்டமூலத்துக்கு அனுமதி

## நாளை சபையில் விவாதம்

கொழும்பு. நவ. 10

ஊழியர்கள் ஓய்வுபெறும் குறைந்தபட்ச வயதை நிர்ணயிக்கும் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் அமைச்சர் நிமல் சிறிபால டி. சில்வா தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

அதேபோன்று, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்த)சட்டமூலத்துக்கும் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

இந்தச் சட்டமூலங்கள் ஊடாக தனியார் துறை ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 60 வயது வரை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. விசேடமாக, இதுவரை தனியார் துறையில் பணியாற்றும் பல்வேறு ஊழியர்களின் ஓய்வுபெறும் குறைந்தபட்ச வயது நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.

பெரும்பாலும் தனியார்துறை ஊழியர்கள் ஓய்வுபெறுவது ஊழியர்களுக்கும் தொழில் வழங்குனருக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை அடிப்படையாக கொண்டே ஆகும்.

இந்த சட்டமூலங்கள் தொடர்பான இரண்டாம் வாசிப்பு நாளை வியாழக்கிழமை 11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் குழுக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன் செனவிரத்ன, வடிவேல் சுரேஷ், அசோக்க பிரியந்த, வீ. இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சார்ள்ஸ் எம்.பி.க்கு கொரோனா தொற்று

யாழ்ப்பாணம். நவ. 10.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையிலேயே அவருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

இதனை தொடர்ந்து அவர் தன்னை சுய தனிமைப்படுத்திக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சார்ள்ஸ் நிர்மலநாதன் தனது பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# மேலும் 538 பேருக்கு கொரோனா தொற்று!

கொழும்பு, நவ. 11

நாட்டில் மேலும் 538 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 546,473 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றில் இருந்து மேலும் 6,689 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 522,184 ஆக அதிகரித்துள்ளது.

## கனமழை...

ளது.

நாட்டில் சீரற்ற காலநிலை காரணமாக 17 மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணிநேரத்தில் மாத்திரம் 05 பேர் சீரற்ற காலநிலையால் உயிரிழந்துள்ளனர். (அ)

## சாதாரண தரம்...

வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த செய்முறை பரீட்சைகள் டிசெம்பர் 01ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கோவிட் தொற்றுநோய் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டமையால், அழகியல் பாடங்களின் செய்முறை பரீட்சைகள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கடலுக்கு...

தென்கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றமுத்த தாழ்வு பகுதி உருவாகியிருப்பதே இதற்கு காரணம் என்று திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது அடுத்த 36 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி மேற்கு மற்றும் வடமேற்கு திசையில் பலமாக நகர்ந்து இலங்கையின் வடக்கு கடற்கரைக்கு அருகில் தமிழகத்தின் வடக்கு கடற்கரையை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் விளைவு பலத்த மழை மற்றும் பலத்த காற்று வீச வாய்ப்புள்ளது.

அப்பகுதியில் உள்ள மீனவ மக்களை உடனடியாக கரைக்கு அல்லது பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுள்ளது.

## வெள்ளத்தால்...

நேற்று இரவு உணவு வழங்கப்பட்டது.

டான் தொலைக்காட்சி குழுமத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இளைய தம்பி செல்வச்சந்திரனின் ஏற்பாட்டில் மன்னார் எழுத்தூர் அன்னை தெரேசா ரோமன் கத்தோலிக்க பாடசாலை, சவுத்பார், சாந்தபுரம், தலைமன்னார் ஆகிய பகுதிகளில் உள்ள 6 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கான இரவு உணவு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மன்னார் பிரதேச செயலர் எஸ். பிரதீப், டான் தொலைக்காட்சி நிறுவனப் பணியாளர்கள் கலந்துகொண்டனர். (அ-03)

## யாழ். - கொழும்பு...

வரப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று பிற்பகல் கொழும்பு பயணித்த கடுகதி ரயில் வவுனியா தாண்டிக்குளத்தை அண்மித்த போது தீப்பற்றியது. ரயிலின் 'ஹொட் பொக்ஸ்' பகுதியே இவ்வாறு தீ பிடித்தது.

இதை அவதானித்த ரயில் ஊழியர்கள் விரைந்து செயல்பட்டு தீயணைக்கும் பம்பியை செயல்படுத்தி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். ரயிலின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பினனர் ரயில் தொடர்ந்து பயணித்தது. இதனால், ரயில் ஒரு மணி நேரம் தாமதமாகவே கொழும்பை சென்றடைந்தது. (ஐ)

ஈழநாடு
Eelanadu





## இருபது - 20 உலகக் கிண்ணம்:

# முதல் அரையிறுதி போட்டி இன்று; இங்கிலாந்து - நியூசிலாந்து மோதல்!

அபுதாபி, நவ. 10

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டி இன்று புதன்கிழமை அபுதாபியில் நடக்கிறது. இதில் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

சரியாக 850 நாட்களுக்கு முன்னர் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியின் இறுதியாட்டத்துக்கு முன்னேறுவதற்காக நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின. லோர்ட்ஸில் நடந்த டெஸ்ட் தொடரை வெற்றி கொண்ட நியூசிலாந்து அணி, டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தையும் கைப்பற்றியது.

இந்த நிலையில், மீண்டும் ஒரு முக்கிய போட்டியில் - உலகக் கிண்ணத்துக்கான அரையிறுதிப் போட்டியில் இந்த இரு அணிகளும் மோதுகின்றன. இவை இரண்டும் இதுவரை 21 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளன. இவற்றில் 7 போட்டிகளில் நியூசிலாந்தும் 12 போட்டிகளில் இங்கிலாந்தும் வென்றுள்ளன. இரு போட்டிகள் முடிவின்றி கைவிடப்பட்டன.


இங்கிலாந்து அணியைப் பொறுத்தவரை அதன் நட்சத்திர வீரர்களான பென் ஸ்ரோக்ஸ், ஜோப்ரா ஆர்ச்சர் ஆகியோர் இல்லாமலேயே இந்தத் தொடரில் சாதித்துள்ளது. ஜசன் றோய், ஜோஸ் பட்லர் ஆகியோர் துடுப்பாட்டத்தில் அந்த அணிக்கு பலம் சேர்த்துள்ளனர். ஜோஸ் பட்லர் கடந்த 5 போட்டிகளில் 240 ஓட்டங்களை குவித்துள்ளார். பந்துவீச்சைப் பொறுத்தவரை ஜோர்தன், மொயின் அலி ஆகியோர் சிறப்பாக செயல்படுகின்றனர்.

எனினும், இந்தப் போட்டியில் காயம் காரணமாக தொடக்க வீரரான ஜசன் றோய் காயம் காரணமாக விலகியுள்ளார். இது இங்கிலாந்து அணிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருதப்படுகின்றது.

இங்கிலாந்து (உத்தேச) அணி- ஜோஸ் பட்லர், ஜொனி பெயர்ஸ்ரோ, டேவிட் மலன், இயன் மோர்கன் (அணித் தலைவர்), லியம் லிவிங்ஸ்ரன், மொயின் அலி, சாம் பில்லிங் அல்லது டேவிட் வில்லி, கிறிஸ் வோக்ஸ், கிறிஸ் ஜோர்தன், அடில் ரஷீத், மார்க் வூட்.

நியூசிலாந்து அணியை பொறுத்தவரை ரிம் சௌதி, கேன் வில்லியம்சனின் வழிநடத்தல் அணிக்கு கூடுதல் பலம் சேர்க்கிறது.

நியூசிலாந்து (உத்தேச) அணி - மார்ட்டின் குப்தில், டரில் மிற்செல், கேன் வில்லியம்சன் (தலைவர்), கிளென் பிலிப்ஸ், ஜேம்ஸ் நீசம், மிற்செல் சாண்ட்னர், அடம் மில்ன், ரிம் சௌதி, இஷ் சோதி, ட்ரெண்ட் போல்ட். (ஐ)



## இந்திய அணி தலைவராக ரோஹித் சர்மா நியமனம்!

புதுடில்லி, நவ. 10

இந்திய அணியின் புதிய தலைவராக ரோஹித் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார். நியூசிலாந்து அணிக்கு எதிரான இருபது - 20 தொடருக்காகவே அவர் அறிவிக்கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ணத் தொடர் முடிவடைந்ததும் நியூசிலாந்து - இந்திய அணிகள் 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடுகின்றன. இந்தத் தொடர் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகி 21ஆம் திகதி நிறைவடைகின்றது.

இந்தத் தொடருக்கான 16 வீரர்கள் கொண்ட அணியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நேற்று அறிவித்தது. அணித் தலைவர் பொறுப்பிலிருந்து விராட் கோலி விலகியமையை தொடர்ந்து ரோஹித் சர்மா அணித் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார். கே. எல். ராகுல் உப அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அணி விவரம், ரோஹித் சர்மா (தலைவர்), கே. எல். ராகுல் (உப அணித் தலைவர்), ருதுராஜ் கெய்க்வாட், ஷ்ரேயாஸ் ஐயர்,

சூர்யகுமார் யாதவ், ரிஷப் பந்த் (விக்கெட் காப்பாளர்), இஷான் கிஷன் (விக்கெட் காப்பாளர்), வெங்கடேஷ் ஐயர், யுஸ்வேந்திர சஹால், ரவிச்சந்திரன் அஸ்வின், அக்சர் பட்டேல், ஆவேஷ் கான், புவனேஷ்வர் குமார், தீபக் சஹார், ஹர்ஷல் பட்டேல், முஹமது சிராஜ். (ஐ)

## பெங்களூர் அணியின் பயிற்றுநராக சஞ்சய்!



பெங்களூர், நவ. 10

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக இந்திய அணியின் முன்னாள் வீரர் சஞ்சய் பங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ. பி. எல். தொடரில் ஒருமுறைகூட பெங்களூர் அணி சம்பியன் பட்டத்தை வெல்லவில்லை. இந்த நிலையில், ஆண்டு தொடருடன் தலைமைப் பொறுப்பிலிருந்து விராட் கோலி விலகினார். தொடர்ந்து அணியின் பயிற்றுவிப்பாளராக இருந்த சைமன் கடிச்சும் விலகினார்.

இந்நிலையில் இந்திய அணியின் முன்னாள் சகலதுறை வீரரான சஞ்சய் பங்கர் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர், பெங்களூர் அணிக்கு துடுப்பாட்ட ஆலோசகராக செயல்பட்டிருந்தார்.

முன்னதாக, 2014 -2019வரை இந்திய அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராகவும் அவர் செயல்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-இசை,நம்ம வீட்டு பிள்ளை திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
7.00 மணி : பாரதீ



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
9.30 மணி: பத்துக்கு 10



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம் திங்கள்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு